திருவள்ளுவர் ஆண்டு 2036

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 99 பகுதி : 3 மார்ச் 2005

மதுரைத் தமிழ்ச் சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

மார்ச்–05

தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

முகவை மன்னர் திரு. நா.குமரன் சேதுபதி	தலைவர்
திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார்	துணைத்தலைவர்
திரு. இரா. அழகுமலை	செயலாளர்
திரு. மா. சங்கரபாண்டியன்	உறுப்பினர்
திரு. டாக்டர் ந.சேதுராமன்	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி என்ற அசோக்	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம்	உறுப்பினர்
திரு. வே.திருவரங்கராசன்	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி	உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன்	உறுப்பினர்
திரு. இரா.கண்ணன்	உறுப்பினர்
திரு. மா.ச. கார்த்திகேய பாலாஜி	உறுப்பினர்

கல்லூரிக் குழு

டாக்டர் ந.சேதுராமன், M.S.,M.Ch.(URO).,M.N.M.S.(URO).,FICS.,	தலைவர்
திரு. மா. சங்கரபாண்டியன், பி.ஏ.பி.எல்.,	செயலாளர்
திரு. இரா. அழகுமலை, எம்.ஏ., எம்.ஃபில்.,	உறுப்பினர்
திரு. இராணி இலட்சுமி நாச்சியார்	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர்.மலையாண்டி என்ற அசோக், பி.எல்.,	உறுப்பினர்
திரு. எஸ்.பரங்குன்றம், பி.ஏ.,	உறுப்பினர்
திரு. இரா.குருசாமி, பி.ஏ.,	உறுப்பினர்
திரு. மா.ச.கார்த்திகேய பாலாஜி,	உறுப்பினர்
திரு. க.முத்தையா பசும்பொன்	உறுப்பினர்
டாக்டர் திரு. நா.பாலுசாமி, எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.பி.எச்.டி.,	உறுப்பினர்
திருமதி. வாசுகி இராஜா, எம்.எஸ்.சி., எம்.ஃபில்.,	உறுப்பினர்
டாக்டர் திரு.க.சின்னப்பா, எம்.ஏ., பி.எச்.டி.,	உறுப்பினர்
பல்கலைக்கழக உறுப்பினர்	

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 99
பகுதி : 3
மார்ச் 2005

திங்கள் இதழ்
திருவள்ளுவர் ஆண்டு 2036

வள்ளல் பாண்டித்துரைத்தேவர்
21.03.1867 - 02.12.1911

மதுரைத் தமிழ்ச்சங்கம் 14-09-1901 THE MADURAI TAMIL SANGAM

இதழ்க் கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	ரூ. 60	ரூ. 600
புரவலர் கட்டணம்	ரூ. 1000	ரூ. 2000
தனி இதழ் கட்டணம்	ரூ. 6	ரூ.

ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ., எம்.ஃபில்.,
செயலாளர் – மதுரைத் தமிழ்ச்சங்கம்.

பதிப்பாசிரியர் இரா. சதாசிவம் எம்.ஏ., எம்.ஃபில்.,
மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை–1.

பொருளடக்கம்

இதழ்மணம்	93
நூல்மதிப்புரை	95
இடக்கரடக்கல் – ஓர் இலக்கியக் கொள்கை பேராசிரியர் கருவை பழனிச்சாமி	97
இலக்கியத்தில் சிறந்த சுவை எது? பேராசிரியர் (மேஜர்) கதிர்மகாதேவன்	101
பெரியபுராணக் காப்பிய ஒருமை பேராசிரியர் சுப. அண்ணாமலை	121
அவன் சேந்தனாவது எவ்வாறு தமிழாகரர் தெ. முருகசாமி	129

இதழ்மணம்.

பேராசிரியர் கருவை பழனிச்சாமி, "இடக்கரடக்கல் - ஓர் இலக்கியக் கொள்கை" என்னும் தலைப்பில் கலிங்கத்துப் பரணியைத் திறனாய்வு செய்துள்ளார். திருக்குறள் பரிமேலழகர் உரை மேற்கோளுடன் எடுத்துரைக்கிறார். அந்த மாலைச் சிறப்புச்செய் காதையில் அசைந்தன வருந்த நிலவுப்பயன் கொள்ளுமென இடக்கரடக்கிக்கூறினார் என அடியார்க்கு நல்லாரும் எடுத்துரைத்திருப்பது ஈண்டு நோக்கத்தக்கது. பேராசிரியர் கருவை பழனிச்சாமி அவர்கள் உரையாசிரியர் வழி உடல்சார்ந்த இன்பச் சுவையை இலக்கியச் சுவையாக இலக்கிய இன்பப் பொருளாக சொல்லக்கூடாததை சொற்சுவை ததும்ப மாற்றித்தரும் உத்தியை, சிறப்பினை ஆய்ந்துரைத்துள்ளார்.

அடுத்துப் பேராசிரியர் கதிர்மகாதேவன் அவர்கள் சிலப்பதிகாரத்தின் நுண்பொருளை "இலக்கியத்தில் சிறந்த சுவை எது?" என்னும் தலைப்பில் ஆய்ந்துரைத்துள்ளார். சிலப்பதிகாரம் ஓர் அவலநாடகம் மட்டுமல்ல; அது செவ்வியல் மொழிகளின் ஒப்பற்ற படைப்பு என்பதைப் பேராசிரியர் உலக இலக்கிய வரலாற்று அடிப்படையில் பிற செவ்வியல் மொழி அவல நாடகத் திறனாய்வாளர்களின் கூற்றோடு ஒப்பிட்டுச் சிலம்பின் மேன்மையை பின்வரும் வரிகளில் எழுதும்பாங்கு ஓர்ந்து உளம் கொள்ளத்தக்கது.

கண்ணீரும் கம்பலையுமே அவலம் என்பதில்லை. கற்பவரின் நெஞ்சிலே விம்மிதமும் வியப்பும் கழிபேரிரக்கமும் உள்ளம் வெருவும் அச்சமும் ஊட்டுதலே அவலத்தின் திட்டமாகும். இத்திட்டத்தை இம்மிகுறையாமல் திட்பமுற நிறைவேற்றுகிறது சிலம்பு; இவ்வளவின் மேலும் மண்ணவரை விண்ணவராக்கும் வித்தகத்தையும் நிறைவேற்றுவதே மிகப்பெருஞ் சிறப்பாகும். அவலங்கொண்டு அழிவது சாதாரண அவல வாழ்க்கை; ஆனால் அழிதன் மாலையதான அவலத்திலும் சீர்மையும் சிறப்பும் பெறுவதே வித்தகமாகும்." எனப் பேராசிரியர் கதிர்மகாதேவன் அவர்கள் உலக இலக்கியத் திறனாய்வாளர்கள் திறனாய்வுச் சிந்தனைக்குச் சிலப்பதிகாரத்தின் அவலநாடக மேன்மையைச் சுட்டிக் காட்டுவது போற்றுதலுக்குரியதாகும்.

இனிப் பேராசிரியர் சுப. அண்ணாமலை அவர்கள் அறம் அறிந்த சான்றோர் மறத்திறம் திறம்பாது நெறி நின்ற பாங்கினை "பெரிய புராணக்காப்பிய ஒருமைத்" தொடரில் எழுதுகிறார். எறிபத்த நாயனார் சோழமன்னனது பட்டத்து யானையை வெட்டி வீழ்த்தினார். காவலர்களை வெட்டி வீழ்த்தினார் அப்பெரியார் அஞ்சவில்லை; அரச நீதியாதாயினும் ஆகுக; அதனை ஏற்கச் சித்தமாக நெஞ்சு நிமிர்த்தி அஞ்சாமல் நின்றார். "விடுசுடர் மழு ஒன்றேந்தி வேறிருதடக்கைத்தாய மழகளிறு என்ன நின்றார்" என்கிறார் சேக்கிழார். கவியுள்ளத்தை, காவிய நோக்கை வீரம் விளையாடும் வன்மைக்களமாகவும் அன்புப் பெருக்கின் வன்மைப் பரிணாமம் பெற்று அறம் கந்தாகமறம் புரிந்த அடியார் அரச நீதிக்குப் பயந்து ஓடி ஒழியவில்லை; பொய் பேசவில்லை; அச்சமின்றி மெய்ப்பொருளின் பக்கம் நிற்கத் துணிந்தார்கள் என்ற செய்தியைப் பேராசிரியர் சுப.அண்ணாமலை அவர்கள் விளக்கும் நுட்பம் உள்ளக்களத்தில் குமித்து வைத்தற்குரியதாகும். ஒப்புமையும் முரணும் சேர்ந்து காப்பிய ஒருமையைத் தோற்றுவிக்கின்றன என்ற செய்தி சிந்தனைக்குரியது.

இறுதியாகப் பேராசிரியர் தெ.முருகசாமி அவர்கள் தொல்காப்பிய நூற்பாவை எடுத்துரைத்து விளக்கியுள்ளார்கள். அதன் வன்மை மென்மைகளை இளைஞர் உலகம் கற்றுத்தேர்க.

பல்லாற்றானும் நம் செந்தமிழ் கட்டுரை வளம் பெற்றுச்சிறக்கிறது. அறிஞர் உலகம் இவ்விதழ் கல்வியாளர் கைகளில் தவழும் வண்ணம் ஆக்கமும் ஊக்கமும் தந்து முயற்சி வெற்றி பெறச் செய்க. நம் செந்தமிழ் குறித்து ஆங்கிலஏடு பின்வரும் குறிப்பை வெளியிட்டுள்ளது.

The New Indian Express Monday Feb7, 05, Page 2 The Madurai Tamil Sangam brings out an excellent periodical called chenthamizh which is a treasure trove for genuine lovers of tamil with studied thesis and erudite articles, but there are few takers.

நூல் மதிப்புரை

நூல் : வருணாசிரம தருமமும் வாய்மொழியும் வள்ளுவமும்

ஆசிரியர் : பேராசிரியர். முனைவர். தி. முருகரத்தனம்.

விலை : ரூ.55— தமிழ்ச்சோலை, அறவாழிநகர், மதுரை—2.

ஆசிரியர் வருணாசிரம தருமம் தென்னகத்தில் நுழைந்ததன் விளைவாக தமிழ் மொழிக்கும், மக்களுக்கும் ஏற்பட்ட அவலங்களை உணர்வு வழி நின்று அறிவுநிலையில் இந்நூல் விளக்குகிறது. தமிழகத்தில் தோன்றிய இருபெரும் நூல்கள் திருவாய்மொழியும், திருக்குறளுமாகும். இரு பெரு நூல்களும் தமிழர் வாழ்வு இலக்கியம், திருவாய்மொழி தமிழ்ச்சமயமாகிய வைணவம் போற்றிப்பரவும் நூல். திருவாய்மொழிக்கு பல்வேறு காலங்களில் பல்வேறு அறிஞர்கள் உரை எழுதினார்கள். எழுத்தெண்ணி உரை தோன்றியது. தமிழ்நாட்டில் தோன்றி வைணவ சமயத்திற்குப் பெரும் பணியாற்றிய இராமானுசர் வடமொழியில் பெருநூல்களுக்கு உரை எழுதினார். ஆனால் அந்தத் தமிழர் தமிழில் ஒரு நூல்கூட எழுதவில்லையே? ஏன்? என்னும் கேள்வியை நூலாசிரியர் எழுப்பியிருப்பது அனைவரின் சிந்தனைக்குரியதாகும்.

நால்வருண வழக்கை எதிர்த்து நிற்கும் இருபெருநூல்களும் இந்த மண்ணில் நிலைபெறவேண்டும் என்னும் கவலையே ஆச்சாரிய இருதயம், திருவள்ளுவ மாலை தோன்றக்காரணம் என்பது நூலில் காணப்படும் செய்தி.

> *“சாத்திரம் பலபேசும் சழக்கர்காள்*
> *கோத்திரமும் குலமும் கொண்டு என்செய்வீர்”*

என்று நால்வருண வழக்கைப் பெரியவர்கள் சாடினாலும் அவர்களுடைய பாட்டு கோயில் பூசைக்குப் பயன்படாமல் இன்று வரைப் புறக்கணிக்கப்படுகின்ற அவலக்கவலைகளை நூலெங்கும்

காணலாம். செயற்கரிய செய்த பெரியோர்கள், குடிசையிலும், மரநிழலிலும் இருந்த இறைவனை நாளும் இன்னிசை பாடி மாடமாளிகையில் ஏற்றினார்கள். ஆனால் வடமொழியும், வருணாசிரமும் இன்றும் தமிழகத்தில் கோயில் கருவறையில் வீற்றிருப்பதை தமிழர்கள் ஒட்டார்பின் சென்று கெட்டார்கள் என நூல் தெளிவுறுத்துகிறது.

இது தவிர பேராசிரியரின் பரந்த கல்வி, இலக்கிய, அனுபவம், இந்தியசமயம், வரலாறு, தமிழகத்தின் பழைய பரப்பு, வரலாறு, உலகத்து அறிஞர்கள் கருத்து ஆகிய நுட்பமான பல செய்திகள் நூலில் விரிந்து பரந்து இடம்பெற்றிருப்பது கற்பவர்களுக்கு புதிய வரவாகலாம்.

இடக்கரடக்கல்

ஓர் இலக்கியக்கொள்கை

பேராசிரியர், கருவை, பழனிச்சாமி
கரூர் - 3

இந்தியத் திருநாட்டில் வடகிழக்கில் இருந்த நாடு கலிங்கநாடு. தென்கிழக்கில் இருந்த காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பிற்காலச் சோழமன்னராக விளங்கிய முதலாம் குலோத்துங்கன், கப்பம் செலுத்தத் தவறிய கலிங்கத்தின் மீது படையெடுத்தான். கருணாகரன் என்ற தளபதியின் தலைமையில் சென்ற தமிழர் படை, கலிங்கமன்னன் பத்மநாபனையும் கலிங்கவீரர்களையும் சிதறி ஓடும்படி வென்று திரும்பிய வரலாற்றை இரண்டிரண்டு அடிகளைக் கொண்ட 600 தாழிசைப் பாவின வகையில் ஜெயங்கொண்டார் எனும் புலவர் பாடிய தமிழ்ச் சிறுகாப்பியமே கலிங்கத்துப்பரணி. இது ஒரு போர் பற்றிய வரலாற்று இலக்கியம். அந்தப் போர்க்களத்தையும் தோற்றுப்போன கலிங்கவீரர்கள் எப்படி எல்லாம் தப்பிப்பிழைத்தார்கள் என்பதையும் படிப்பவர்கள் நேரில் காண்பது போல வீரச்சுவையும், நகைச்சுவையும் கலந்து பாடிய உணர்ச்சிமயமான பாடல்கள், ஓசை நயத்தாலும், பொருள் நயத்தாலும் கலிங்கத்துப் பரணியைத் தனிப்பெருமைக்குரிய சிற்றிலக்கியமாக்கிவிட்டன.

கலிங்கத்துப்பரணியின் இலக்கிய வரலாற்றுப் பெருமை அதோடு நிறைவடையவில்லை. அதனைப் பாடிய ஜெயங்கொண்டாரின் கற்பனைத் திறன், காதல் சுவை நிறைந்த கடைதிறப்புப்படலப் பாடல்கள் மூலம் முருகியல் மனம் கமழும் உத்திச் சிறப்பைக் கொண்டு அதனைச் சாகாவரம் பெற்ற அழகோவியமாக்கிவிட்டதை அறிய முடிகிறது.

வீரச்சுவைக்கு உரிய போர்ச் செய்திகளை எடுத்துரைக்கும் நூலாயினும் புலவருடைய கற்பனைத் திறனால் (கலிங்கத்துப்பரணி) காதல் சுவையும் மிக்குவிளங்குமாறு அமைக்கப்பட்டுள்ளது என்ற அறிஞர் மு.வ. அவர்களின் மதிப்பீடு உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

மறைந்த ம.பொ.சி.யின் திறனாய்வை மறுத்து, பா.இறையரசன், 13வது இ.ப.த.மன்ற ஆய்வுக் கோவையில் (1981) கலிங்கத்துப்பரணியின் தேவையையும், பயன்பாட்டினையும் போற்றி கலிங்கத்துப்பரணி தேவையா? என்று வினாவி தக்க விடையளித்துள்ளார்.

அதோடு 1989இல் அனைத்திந்தியத் தமிழ் இலக்கியக் கழகம் வெளியிட்ட தமிழ் இலக்கிய ஆய்வுக் கோவை முதல் தொகுதியில் ஆய்வறிஞர்கள், இரா.கஸ்தூரியும், த.ஜெயராஜும், மு.பிளாரன்ஸும் தங்கள் ஆய்வுக்கட்டுரைகள் மூலம் கலிங்கத்துப்பரணியின் சிறப்பினைக் காட்டியுள்ளனர். அறிஞர் அண்ணா உட்பட அறிஞர் பலரும் கலிங்கத்துப்பரணியின் பெருமையைப் புகழ் பாடி மகிழ்ந்துள்ளது வெளிப்படை. மேலோட்டமாகப் பார்ப்பவர்களுக்கு, கடைதிறப்புப் பாடல்களில் வரம்பு மீறிய காமச்சுவை இடம் பெற்றிருப்பதாகத் தோன்றலாம். ஆனால் அதன் வருவதுணர்த்தும் முன்னோக்கு உத்தியைப் பயன்படுத்தி கலிங்கத்துப் பரணி இயற்றப்பட்டதற்கான முதன்மையான நோக்கம் இடம் பெற்றுள்ளதை பின்வரும் இரண்டு பாடல்களில் வெளிப்படையாகச் சுட்டியுள்ளதைப் படிக்கும் போது கடைதிறப்புப்படலம் இன்றியமையாதது என்பது உணர இயலும்.

"காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த
களவி மடவார்! கழல்சென்னி
காஞ்சி இருக்கக் கலிங்கம் குலைந்த
களப்போர் பாடக் கடைதிறமின்!"

முதலடியில் இடம்பெறும் காஞ்சி, மகளிர் மணிமேகலையான இடையணியையும், கலிங்கம், உடையையும் குறிக்கும். இரண்டாமடியில் காஞ்சி என்பது குலோத்துங்கன் தலைநகரான காஞ்சிபுரத்தையும் கலிங்கம் என்பது சோழனால் தோற்கடிக்கப்பட்ட கலிங்கநாட்டினையும் சுட்டும். இதில் சொல்நயத்தோடு காதல் சுவையையும் வீரச்சுவையும் இணைத்த இலக்கியத்திறன் காண இடமுண்டு.

அடுத்த பாடலில் இலங்கையை வில்வீரன் சீதாராமன் (கருணாகரன்) வெற்றிபெற்ற இதிகாசச் செய்தியை முன்னிறுத்தி பிற்காலத்தில் கலிங்கநாட்டை வென்ற தளபதி (கருணாகரன்)

பெருமை கூறப்பின்னணியாகக் கையாண்ட இலக்கியத்திறன் தெரிகிறது. இத்தகு சொல்நயமும் பொருள்நயமும் கலந்த கடைத்திறப்புப் பாடல் இது.

"இலங்கை எறிந்த கருணாகரன் தன்
இகல்வெம் சிலையின் வலிகேட்பீர்!
கலிங்கம் எறிந்த கருணாகரன் தன்
களப்போர் பாடக் கடைதிறமின்!"

சோழநாட்டு வெற்றி வீரர்களை வாழ்த்தி வரவேற்க மறுத்து, ஊடல் கொண்ட மகளிரின் மூடிய கதவுகளைத் திறந்து தம் காதலரைக் கூடி மகிழவேண்டி விண்ணப்பித்தார் ஒட்டக்கூத்தர் என்னும் அரசவைக் கவிஞர். அம்மகளிரோ கலிங்கப் போர்க்காரணமாக காலந்தாழ்த்தித் திரும்பிய வீரர்களுக்கு நல்வரவு கூறாமல் ஒட்டக்கூத்தன் பாட்டிற்கு இரட்டைத்தாழ்ப்பாள் போட்டு ஊடலில் திளைத்திருந்தனர். அப்போது அவர்களின் காதல் உணர்வுடன் கூடிய காமலீலைகளை நினைவூட்டிப் பாடுவதுதான் அவர்கள் ஊடலை மறந்து மனம் மாறிக் கதவைத் திறக்க உரிய ஒரே வழியாக ஜெயங்கொண்டார் கையாண்ட உத்திநயம் தான் காதல்நயம் கொண்ட கடைதிறப்புப்படலம் தோன்றக் காரணமாயிற்று. திருக்குறள் காமத்துப்பாலுக்குப் பரிமேல் அழகர் ஒரு மதிப்புரை தீட்டியுள்ளார்.

"வடநூ லார் இடக்கர்ப் பொருளவாகச்
சொல்லிய புணர்ச்சித் தொழில்களும்
ஈண்டடக்கிக் கூறப்பட்டன"

என்று அவர் கருத்து காமத்துப்பாலில் புணர்ச்சி மகிழ்தல் என்ற அதிகாரத்தின் முதல் குறளின் விளக்கமாகும். ஒரு குறளுக்கு மட்டுமல்லாமல் காமத்துப்பால் முற்றும் அக்கருத்தைப் பொருத்திப் பார்ப்பது தவறாகாது. அது ஒரு இலக்கியக் கொள்கையாகி கலிங்கத்துப் பரணிக்கும் ஒத்து வரக்கூடியதாகிறது.

"புடைபட இளமுலை வளர்தொறும்
பொறை அறிவுடையரும் நிலைதளர்ந்து
இடைபடுவதுபட அருளுவீர்
இடுகதவு உயர்கடை திறமினோ"

"இத்துயில் மெய்த்துயிலே என்று
குறித்து இளைஞர்
இது புலவிக்கு மருந்து என மனம்
வைத்து அடியில்
கைத்தலம் வைத்தலுமே பொய்த்
துயில் கூர்நயனக்
கடைதிறவாமடவீர் கடைதிறமின் திறமினே"

இடக்கர்ப்பொருள் என்றும் இடக்கரடக்கல் பொருள் என்றும் பிரித்து நயம் கண்டு போற்ற இவ்விரு பாடல் பொருளோடு பின்வரும் பாடல் கருத்து நயத்தையும் ஒத்து நோக்க இடமுள்ளது.

எனது அடங்க இனிவளவதுங்கன் அருள்
என மகிழ்ந்து இரவு கனவிடைத்
தனதடங்கள் மிசைநகம் கடந்த குறி
தடவுவீர் கடைகள் திறமினோ
முலைமீது கொழுநர்கைந் நகம் மேவு குறியை
முன் செல்வம் இல்லாத அவர் பெற்ற நிதிப்போல்
கலைநீவியாரேனும் இல்லாத இடத்தே
கண்ணுற்று நெஞ்சம் களிப்பீர்கள் திறமின்

இதையெல்லாம் இடக்கரடக்கல் என்னும் தகுதி வழக்கைப் பின்பற்றி எழுந்த உணர்ச்சிப் படங்களாகும். நிறையழிதல், அவர்வயின் விதும்பல், புணர்ச்சி விதும்பல் ஆகிய மூன்று காமத்துப்பால் அதிகாரங்களுக்கு விளக்கவுரை வரைந்த சொற்சித்தரங்களே என்று எண்ணுவது முறை.

இலக்கியமரபில் தான் எத்தனை எத்தனை உத்திகள். காமத்துப்பாலா, இன்பத்துப்பாலா என்று கலங்குவோருக்கு திருக்குறள் காமத்துப்பாலை காதல்பாலாக ஓதி ஓதி உணரமுடியும் என்றால் கடைதிறப்புப் படலப்பாடல்களையும் காதல் ஓவியங்களாகக் கண்டுகளிப்பதற்கு இடமுண்டே தவிர அவைகளை தரம் தாழ்ந்த விரச நடையாகக் கருத இடமில்லை.

இலக்கியத்தில் சிறந்த சுவை எது?

தமிழ்ப்பேராசிரியர் (மேஜர்) கதிர்மகாதேவன். எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி.,
முன்னைத் துணைவேந்தர் தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
முன்னை ஆய்வுப் பேராசிரியப் பெருந்தகை
பல்கலைக்கழக மானியக்குழு, புதுதில்லி.
E-mail : kathirmaha@sancharnet.in
271, அறிஞர் அண்ணாநகர், மதுரை 625 020. *Ph.:* 0452 2533742.

தமிழ் மக்கள் இலக்கியச் சுவைதேரும் திறத்தில் தொன்றுதொட்டே தலைநின்றவர்கள்.

தொல்காப்பியத்தில் மெய்ப்பாட்டியல் என்னும் இயல் இலக்கியச்சுவை பற்றியே கூறுகின்றது.

மனிதன் தன் வாழ்க்கையில் விரும்பாத அவலச் சுவையை இலக்கியத்தில் விரும்பிப் படிக்கிறான்.

அவலம் எந்த முறையில் காணப்பட வேண்டும் என்று கூறுவதை விட, சிறந்த வகையில் அவலம் புலப்பட புலவர் ஏற்ற முறை எது என்று கூறுவது சால நன்று. கணிப்பதற்கு வடநூல் மரபினைப் பின்பற்றுவதும், நூல்களைப் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் எனப் பிரிப்பதும், தமிழகத்தில் இடைக்கால மரபாக அமைந்திருந்தது. தொல்காப்பியச் செய்யுளியலை மறந்தும் புறக்கணித்தும் இடைக்கால இலக்கிய உலகம் வளர்ந்தது. இது வரலாறு. இடைக்கால வரலாற்றில் வடமொழி நெறி தமிழர் வாழ்வில் இடம்பெற்றது போலவே மேலைநாட்டு நெறி இன்றைய இலக்கிய ஆராய்ச்சியுலகில் செல்வாக்குப் பெற்றுள்ளது. இவ்வுண்மையினை மனத்துட் கொண்டே சிலம்பினை ஓர் அவலமாகக் காணுகின்றனர் ஆராய்ச்சியாளர்.

பொதுவாக, மேலைநாட்டார் அவலம் என்பது தலைமையான பாத்திரங்களின் அழிவு (.........the ruin of the leading characters) என்றனர். ஊழ்வினை வயத்தால், சிறந்த மனிதனுக்கு ஏற்படும் அழிவே அவலம் என்று கருதினர். சேக்ஸ்பியர் காலத்தில் முதலாவதாக அவலம் என்பது

சாவை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என்று சிலரால் கருதப்பட்டது. அடுத்து, தலைசிறந்த மனிதனின் அழிவு அவனுடைய குணநலத்தின் விளைவாலேயே அமைய வேண்டும் என்றும், அப்படிப்பட்ட குணச்சித்திரத்தின் அமைப்பே கதைக்கு உருவகமாகத் திகழ்தல் வேண்டும் என்றும் எண்ணினர்.

நாளடைவில் இவ்வகை விதிகளில் நெகிழ்ச்சி ஏற்படலாயிற்று. இன்று ஒருவனுடைய ஒழுக்கச் சீர்கேட்டினால் நிகழ வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. அன்றாடச் சமுதாய வாழ்வில் ஏற்படும் பொருளாதாரச் சிக்கலால் உழலுவதைச் சித்தரிப்பதில் கூட அவலம் ஏற்படலாம் என்று கொள்ளும் அளவுக்கு மேலைநாட்டு இலக்கியத் திறனாய்வு மாறியுள்ளது.

சிலப்பதிகாரக் காப்பியம் ஊழ்வினைச் சிறப்பாகக் கொண்ட பண்டைய கிரேக்க அவல நாடகங்களுக்கும், ஆளுமைகளைச் சிறப்பாகக் கொண்ட இக்கால அவல நாடகங்களுக்கும் இடைப்பட்ட நாடகக் காப்பியம் ஆகும். இக்காப்பியத்தில் அவலச் சுவையே ஏனைய சுவைகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ளது என்பது ஒருதலை. சுவை என்பது இரண்டு முறையில் தோன்றக் கூடும். "இருவகை நிலத்தின் இயல்வது சுவையே" (செயிற்றியம்) பொருளிடமிருந்து ஏற்படும் சுவை ஒன்று. பொறியின்வாயிலாகப் பெறும் சுவை மற்றொன்று. இவ்விருவகைச் சுவைகளும் இயைந்து வருவதே சிறப்பானதாகும். சிலப்பதிகாரத்தில் அவலச் சுவை இத்தன்மைத்தாகும். கலையுலகில் அவலச் சுவையே மக்களால் போற்றப்படும் சுவையாம். தனிமனித வாழ்க்கையில் வரும் துன்பம், வாழ்வைக் குலைப்பதால் வெறுக்கப்படுகின்றது. அதே அவலம் இலக்கியத்தில் ஒருமைப்பாட்டை விளைவிப்பதால் போற்றப்படுகின்றது.

ஆதியில் கிரேக்க நாட்டு அரிஸ்டாட்டில் கொண்ட ஊழ்வினை கோட்பாட்டுக்கும் (Theory of Fate) இன்றைய மேலைநாட்டார் கொண்டுள்ள கோட்பாட்டுக்கும் நிரம்ப வேறுபாடுகள் உண்டு. ஆதி நிலையிலிருந்து இன்றைய நிலை பல மாறுதல்களும் சில மாறுபாடுகளும் கொண்டுள்ளது.

வரலாற்று முறைப்பட்ட இந்த நிலைமையை முதலில் மனத்தில் அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். மேலையரின் இலக்கிய அவலத்தை ஆராய்வதற்குக் கூட இவ்வரலாற்றுப் பின்னணி வேண்டியுள்ளது. பண்பாடு, நாகரிகம் முதலான கூறுகளில் எத்துணையோ வகைகளில் நாம் மேலையரினின்றும் மாறுபட்டவர்கள். எனவே குறிப்பிட்ட ஒரு மரபின் வழிப்பட்டு வளர்ந்த அவலத் திறனாய்வை, நம்மவர் நூல்களோடு இயைய வைக்க முயலும் போது முற்றிலும் பொருந்தும் என எதிர்பார்க்க முடியாது என்பது தெளிவு.

எனினும், ஆதிமுதல் இன்றுவரை அவலத்திற்கு மேலைநாட்டார் கூறியுள்ள இயல்புகளில் தலைமையான கூறுகளெல்லாம், சிலம்பில் அமைந்து கிடப்பதைக் காண முடிகின்றது. இது வியப்புக்கு உரிய ஒன்று.

சிலப்பதிகாரத்தில் காணப்படும் தலைமையான பாத்திரங்களெல்லாம் நம்முடைய உள்ளத்தில் அவலத்தை ஏற்படுத்தி வெற்றி பெறுகின்றனர் என்பதில் ஐயமில்லை.

கதைக்குத் தலைவியாகிய கண்ணகியின் வாழ்வே அவலமாகக் காட்சியளிக்கின்றது. ஆனால், அவளே வாழ்க்கையில் சிறந்த வெற்றியைப் பெறுகின்றாள். ஆனால், கோவலன் வாழ்க்கையின் பெரும்பகுதி அவலமானதாய் இல்லை; அவனுடைய சாவே, கதையின் அவலத்தை மிகுதிப் படுத்துகின்றது; மாதவியை விட்டுக் கோவலன் பிரிந்ததினால் அவளுக்கு ஏற்படும் அவலம் நம் மனக்கண்முன் நின்று நம் உள்ளத்தில் இரக்கத்தை உண்டு பண்ணுகின்றது. பாண்டியனின் அவல வாழ்வின் முடிவு செங்குட்டுவனால் போற்றப்படுகின்றது. பாண்டியமாதேவியின் துன்பம் கண்ணகியின் அவலத்துடன் சேர்ந்து நம் உள்ளத்தைக் கவர்கின்றது. இந்த அவலக் காட்சிகளின் கருவில் தோன்றி உருவான சிலப்பதிகாரம் ஓர் அவல நாடகமாகக் காட்சியளிக்கின்றது. சிலப்பதிகாரத்தில் காணப்படும் ஒவ்வொரு பாத்திரமும் எந்த அளவில் அவலச்சுவை பயக்கின்றது என்பதைக் காண்பதாலே சிலப்பதிகாரம் அவலச்சுவை தருவதில் எங்ஙனம் முழுமை அடைகின்றது என்பதை ஓரளவு உய்த்துணரவியலும்.

மாதரி, கவுந்தியடிகள் ஆகிய இவ்விருவரின் எண்ணமும் உயிர்துறந்த செயலும் அவலத்தில் பங்குகொள்கின்றன.

சிலப்பதிகார அவலத்துக்கு ஒரு சிறப்பு உண்டு. வடுநீங்கு சிறப்பின் மனைக்குத் தலைவியாய் இளங்கோவடிகளின் இதயத்தைக் கவர்ந்தவள் கண்ணகி; மேலும் தன் பொறையாலும் ஏனைய மாண்பாலும் ஒரு மாமணியாய் உலகிற்கு ஓங்கிய திருமாமணியாய்ப் பொலியும் சீர்மையுடையாள். பெருங்குணத்துக் காதலளாகிய அப்பெண்ணரசி சிறந்த கணவனைப் பெற்றும் சில ஆண்டுகளே காதலாற் பிரியாமல் கவவுக் கை நெகிழாமல் வாழும்பேறு பெறுகின்றாள்; பின்னர் அவள் கண்ட தண்டனை - தகாத தண்டனை - கணவனைப் பிரிய நேர்ந்ததாகும். பல்லாண்டுகள் கழிந்தபின் திரும்புகின்றான் கணவன். கண்ணகியின் வாடிய மேனி வருத்தங்கண்டு, பொருட்குன்றம் தொலைத்தமைக்கு இரங்கி நாணுகின்றான். தன் மனையாட்டியின் மேம்பாட்டினை உணர்கின்றான். இந்நிலையிலே அவர்கள் இருவரும் சேர்ந்து வாழ்ந்திருக்கலாம். ஆயின், கண்ணகி நல்லாளுக்கு அப்பேறுதானும் வாய்க்கவில்லை. ஊழ்வினை துரப்ப, இருவரும் புறப்பட்டுவிடுகின்றனர்; மண்மகள் அறியா வண்ணச் சீறடி காடு மேடெல்லாம் பட்டு அலக்கண் உறுகின்றது. இறுதியில் கணவனையே இழக்கிறாள் கண்ணகி. இதனினும் பேரவலம் ஒன்றினை எண்ணிப் பார்த்தலும் இயலாது. இவ்வவலத்தைச் செப்பம் பொலியச் சித்தரிக்கும் சிலம்பின் திறம் பெரிதும் போற்றத்தக்கது. ஆனால், அவலத்தின் மையத்திலும் கண்ணகியாகிய மாதரசியை விண்ணவர் போற்றும் தெய்வதமாக ஆக்கியதில்தான் சிலம்பின் அவலத் திறம் சிறக்கின்றது. கண்ணீரும் கம்பலையுமே அவலம் என்பதில்லை; கற்பவரின் நெஞ்சிலே விம்மிதமும் வியப்பும் கழிப்பேரிரக்கமும் உள்ளம் வெருவும் அச்சமும் ஊட்டுதலே அவலத்தின் திட்டமாகும். இத்திட்டத்தை இம்மி குறையாமல் திட்பமுற நிறைவேற்றுகிறது சிலம்பு; இவ்வளவின் மேலும், மண்ணவரை விண்ணவராக்கும் வித்தகத்தையும் நிறைவேற்றுவதே மிகப் பெருஞ் சிறப்பாகும். அவலங்கொண்டு அழிவது சாதாரண அவல வாழ்க்கை; ஆனால், அழிதன்மாலையதான அவலத்திலும் சீர்மையும் சிறப்பும்

பெறுவதே வித்தகமாகும். நத்தம்போல் கேடும் உளதாகும் சாக்காடும் வித்தர்க்கல்லால் அரிது என்பது வள்ளுவம், சிலம்பின் நாயகியாகிய கண்ணகி இத்தகு வித்தகப் பெருமாட்டியாகிறாள். அவலச் சுவை சிலம்பின் சிறப்பு அச்சிறப்புக்கும் சிறப்புத் தருவது இவ்வித்தகம்.

காப்பியத் தலைவி

கண்ணகி வாழ்க்கையின் தொடக்கம் இன்பமுடையதாய்க் காட்டப்படுகின்றது. "தூமப்பணிகள் ஒன்றித் தோய்ந்தால் என, ஒருவார்காமர் மனைவி எனக் கைகலந்து ...." என்பதால் கண்ணகியின் இன்பவாழ்வு புலப்படுகின்றது. ஆனால், "யாண்டு சில கழிந்தன" என்ற அளவிலேயே கண்ணகியின் வாழ்வில் சில ஆண்டுகளே இன்பமுடன் வாழ்ந்தாள் என்பது தெளிவாகிவிடுகின்றது. கோவலன் கண்ணகியைவிட்டுப் பிரிந்து மாதவியை அடைகின்றான். கண்ணகியின் அவல நிலையை விளக்கவே "அந்திமாலைச் சிறப்புச் செய் காதையை" இளங்கோவடிகள் எழுதினார் என்றால் குறையில்லை. கணவனைப் பிரிந்து வாழும் கண்ணகியின் துயரநிலை,

"அம் செஞ் சீறடி அணி சிலம்பு அழிய
மென் துகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்
மங்கல அணியின் பிறிதணி மகிழாள்
கொடுங் குழை துறந்து வடிந்து வீழ் காதினள்
திங்கள் வாள்முகம் சிறுவியர் பிரிய
செங்கயல் நெடுங் கண் அஞ்சனம் மறப்ப
பவள வாள் நுதல் திலகம் இழப்ப
தவள வாள் நகை கோவலன் இழப்ப
மை இருங் கூந்தல் நெய் அணி மறப்ப
கையறு நெஞ்சத்துக் கண்ணகி அன்றியும்"

என்று கண்ணகி அன்றியும், பிற பெண்கள் காதலரைப் பிரிந்த நிலையைக் கூறுகின்றார். எனவே இந்நிலையில் நம்முள்ளத்தினுள் நெகிழ்ச்சியை ஏற்படச் செய்கின்றார்.

அரிஸ்டாடிலின் கொள்கைப்படி, நம்முடைய உள்ளத்திலே இரக்கமும், அச்சமும் தோன்றும் நிகழ்ச்சி அவலத்தின் சிறந்த பகுதி ஆகும். ிலப்பதிகாரம் ஒரு நாடகக் காப்பியம்; எனவே, நாடகத்தின் வெற்றிகளும் இதற்குண்டு. காப்பியமும், நாவலும் செய்திகளைக் கூறுவது; நாடகம் ான்பதில் பாத்திரங்களின் பேச்சாலும், செயலாலும் நம்மனநிலையில் ாடகத்தின் கருவை உணர்த்துவது என்கின்றார் ஹட்சன். எனவே, ிலப்பதிகாரத்தில் நாடகப்பாணி மிளிர்கின்றது. தேவந்தி கண்ணகியின் அவலநிலையை உணர்ந்து அதைப் போக்க முயல்கின்றாள். ஆனால் ண்ணகியின் துயரம் அவள் பேசும் சிற்சில சொற்களின் மூலம் நம் ள்ளத்தில் பதிந்து விடுகின்றது. "பீடன்று" என்று...தன் துயரத்தின் ால்லையிலே மூழ்கத் தயாராகின்றாள். சீரும் சிறப்புமாக வாழ்ந்த ண்ணகி மதுரையை நோக்கிச் செல்லுகின்றாள் தன் கணவனுடன்! ல்லியல் நங்கையின் மெல்லியல்பை எண்ணி புண்ணிய முதல்வியாகிய வுந்தியடிகள் வருந்துகின்றார். கண்ணகி தன்னளவில் துயர் அடைந்தாளா?.... என்றால், "இல்லை! தன் துயர் காணாத் தகைசால் ங்கொடி" என்று கூறுகின்றார். இளங்கோவடிகளின் கவுந்தியடிகள் ண்ணகியின் புறத்துயரம் நம் உள்ள நெகிழ்ச்சிக்குக் காரணமாகின்றது. இளங்கோவடிகள் கண்ணகியின் அவலத்தைக் கண்டு, தம் அனுதாபத்தை ிக்க அழகான முறையில் தெரிவிக்கின்றார். வையை நதி கண்ணகிக்கு ற்படும் அவலத்தை எண்ணிக் கண்ணீர் சிந்துகின்றது என்றும், அக்கண்ணீரை மறைப்பதற்குப் பூக்களால் தன் கண்ணீரை மூடிச் ிசல்கின்றது என்றும் வையையின் தண்ணீரை வருணிக்கின்றார்.

"வையை என்ற பொய்யாக் குலக்கொடி
தையற்கு உறுவது தான் அறிந்தனள் போல்,
புண்ணிய நறு மலர் ஆடை போர்த்து,
கண் நிறை நெடு நீர் கரந்தனள், அடக்கி-"

மதுரை மாநகரின் புறஞ்சேரியை அடைந்த போது நிகழ்ந்த ிகழ்ச்சிகளைப் புலப்படுத்து முறை பின்வரும் அவலத்தின் ிமன்னெச்சரிக்கையாக அமைகின்றது. அதைக் காணும் நம்முடைய னக்கண் (Mind's eye) அவலத்தின் எதிரொலியை அனுபவிக்கின்றது. துரையின் எல்லையில் தோன்றும் கொடிகள் காற்றில் அசைவது

"மதுரைக்கு வாராதீர்கள்!" என்று தடுப்பது போலத் தோன்றுகின்றது என்கின்றார்.

"போர் உழந்து எடுத்த ஆர்எயில் நெடுங்கொடி
வாரல் என்பனபோல், மறித்துக் கை காட்ட"

பின்பு மற்றொரிடத்தில் கண்ணகியே தன் துயரம் எப்படிப்பட்டது என்று கூறுகின்றாள். கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்து மாதவியிடம் சேர்ந்த போது கண்ணகியின் புறத்துயரத்தையே இளங்கோவடிகள் முதலில் குறிப்பிட்டார். ஆனால் மதுரையிலே கோவலன் "எழுக என எழுந்தாய் என் செய்தனை!" என கண்ணகி தன் வாழ்க்கையில் அடைந்த அவலத்தைக் கூறுகின்றாள்.

"அறவேர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்,
துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்
விருந்து எதிர்கோடலும், இழந்த என்னை, நும்
பெருமகள் - தன்னோடும் பெரும் பெயர்த் தலைத்தாள்
மன்பெரும் சிறப்பின் மாநிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவு இகந்தனனா
அற்புளம் சிறந்து ஆங்கு, அருள் மொழி அளைஇ.

என் பாராட்ட, யான் அகத்து ஒளித்த
நோயும் துன்பமும் நொடிவது போலும் என்
வாய் அல் முறுவதற்கு அவர் உள் அகம் வருந்த
போற்றா, ஒழுக்கம் புரிந்தீர்; யாவதும்
மாற்றா உள்ள வாழ்க்கையேன் ஆதலின்
ஏற்று எழுந்தனன், யான்"

என்று கண்ணகியின் மூலமாகவே, அவள் உள்ளத்தில் ஏற்பட்ட அவலத்தின் காரணத்தைப் புலப்படுத்துகின்றார் ஆசிரியர்.

'துன்ப மாலை ஊர் சூழ் வரி .... மருட்கை என்னும் மெய்ப்பாடும் அவலம் அரற்றுக் கவலை கையாறென்னு மிவையும் நிகழ்தலியல்பினால் மாலை என்றார்' என்று அடியார்க்கு நல்லார் ஆய்ந்து புலப்படுத்துகின்றார். இங்குக் கோவலன் கொலைச் செய்தியை அறிந்து வந்த ஆய்மகள் பேசாது நிற்க, கண்ணகியின் உள்ளம் படும் அல்லல் அவலத்தின் உருவாகத் தோன்றுகின்றது.

காதலற் காண்கிலேன்; கலங்கி நோய் கைம்மிகும்;
ஊது உலை தோற்க உயிர்க்கும் என் நெஞ்சு - அன்றே
....
அன்பனைக் காணாது அலவும் என் நெஞ்சு - அன்றே
....
வஞ்சமோ உண்டு; மயங்கும் என் நெஞ்சு - அன்றே

என்று கூறுகின்றாள். கோவலனைக் காணவில்லையே என்ற ாண்ணத்தாலேயே மறுகுகின்ற கண்ணகி; அவன் மாண்ட செய்தியையே அறிந்தால் என் செய்வாளோ! எங்ஙனம் துயரத்தைத் தாங்குவாளோ! என்று ரங்குகின்றோம். கோவலன் கள்வன் என்று கொலை செய்யப்பட்டவன் ான்று ஆய்மகள் உரைத்தது கேட்டதும் கண்ணகி கொண்ட அவலம் ம்முன் நிற்கின்றது.

எப்போதும் அரற்றாத - வாய் திறந்து தன் பிரிவு வாட்டத்தைச் சொல்லாத - வாயல் முறுவலும் காட்டத் தயங்காத .... கண்ணகி கோவலன் கொலையுண்டபின் சீறி எழுந்து சினந்து பொங்கி, சீற்றமும் ினமும் சிறியனவாம்படி 'அவலங்கொண்டு அழிவலோ' என்று அரற்றுகின்றாள். முன்னே அவலம் என்று தான் எண்ணாது அவலவாழ்வைத் துணிந்து போற்றி, அவன் இருந்தும் அவளைப் பொருந்தியவரையில் இல்லாதவனாகவே இருந்த போதிலும் - அவலமாகத் ன் வாழ்வைக் கருதாதவள் .... அவன் மாய்விலே அவலத்தைக் ண்டுவிட்டாள்; பொங்கிச் சீறுகின்றாள்; சீறிப்பொசுக்குகிறாள், நாவாலும், யாலும். ஆம் கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதில்!

பொங்கி எழுந்தாள்; விழுந்தாள், பொழி கதிர்த்
திங்கள் முகிலோடும் சேண் நீலம் கொண்டென
செங்கண் சிவப்ப அழுதாள்; தன் கேள்வனை
எங்கணாஅ! என்னா இனைந்து, ஏங்கி மாழ்குவாள்;

இன்புறு தம் கணவர் இடர் எரியகம் மூழ்க,
துன்புறுவன நோற்றுத் துயர் உறு மகளிரைப் போல
மன்பதை அலர் தூற்ற, மன்னன் தவறு இழைப்ப
அன்பனை இழந்தேன் யான் அவலம் கொண்டு
அழிவலோ?

நறை மலிவியல் மார்பின் நண்பனை இழந்து ஏங்கி
துறைபல திறம் மூழ்கித் துயர் உறு மகளிரைப் போல்,
மறனோடு திரியும் கோல் மன்னவன் தவறு இழைப்ப
அறன் எனும் மடவோய்! யான் அவலம் கொண்டு
அழிவலோ?

என்று கூறி, பட்டேன், படாத துயரம்; எனச் சிலம்பு ஏந்தி வஞ்சினம் கூறிச் செல்ல, அதைக் கண்ட மதுரை மக்கள் கண்ணகியின் அவல நிலைக்கு இரங்கி வருந்துவதாகக் கூறுகின்றார் இளங்கோவடிகள்.

களையாத துன்பம் இக் காரிகைக்குக் காட்டி
வளையாத செங்கோல் வளைந்தது! இது என்கொல்?
....
ஐ அரி உண்கண் அழுது, ஏங்கி, அரற்றுவாள்
தெய்வம் உற்றாள் போலும் தகையள்! இது என்கொல்?
என்பன சொல்லி, இனைந்து, ஏங்கி ஆற்றவும்

.... இங்ஙனம் மதுரை மக்கள் கண்ணகியின் அவலத்தை எண்ணுகின்றனர் என்று இளங்கோ தமது உள்ளத்தில் ஏற்படும் அவலத்தின் எல்லையை நம்முள்ளத்தில் தோற்றுவிக்கின்றார். கோவலனை உயிர் பிழைக்கச் செய்து, உடனே இறக்கச் செய்வது அவலத்தின் உச்சநிலை மாயம் கொல்? மற்று என் கொல்? மருட்டியதோர் தெய்வம் கொல்? .... காய்சினம் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்" என்று கண்ணகி அரற்றுகின்றாள். அவலமும், சினமும் கண்ணகியைச் சாதாரணப் பெண்ணாகக் காட்டிற்று. ஆனால் சினம் சிறிது தணிந்தது. தனக்கு ஏற்பட்ட அவலத்தை நீக்க 'தீ வேந்தன் - தனைக் கண்டு, இத்திறம் கேட்பல்யான்' என்று அவையை நோக்கிச் செல்லுகின்றாள். அவளுடைய சினம் குமுறிய உள்ளத்தின் மூலையிலே அகப்பட்டுக் கிடந்தது என்றே கூறவேண்டும். வாயிலோன் அவள் நிலையைக் கண்டு காவலனுக்கு உரைத்த போது, கண்ணகியின் தோற்றத்தில் துயரம் காணப்படவில்லை ஆனால், சினத்தின் எல்லையே காட்டப்படுகின்றது.

'செற்றனள் போலும்; செயிர்த்தனள் போலும்;
பொன் தொழில் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்'

என்று கூறுகின்றான். கண்ணகியின் சினத்தின் வெளிப்பாட்டையே காண்கின்றோம். மதுராபுரித் தெய்வமும், முன்னிலையாய் பின்னிலைத் தோன்றி, கேட்டிசின் வாழி, நங்கை! என் குறை, என்று கூறுகின்றாள்.

மாநாய்கள் குலக்கொம்பராம் கண்ணகி மென்மையின் உருவகம்; மெல்லியலார் மேதகவு. அவளுடைய வண்ணச் சீறடியை மண்மகளும் அறியாள். அத்துணை மென்மையும் செல்வச் செழிப்பும் கொண்டவள். மேலும், கணவன் பிரிந்துறைந்த காலத்திலும் சினங்கொள்ளாத சிந்தையினள் கண்ணகி. எவ்வாற்றானும் பிறரறியா நிலையினளாகிய கண்ணகி - மதுரை மாநகரின் வீதியெல்லாம் அலைந்தாள். அரற்றினாள் அவலமே ஓர் உருக்கொண்டது போல அலமந்தாள் மன்மகளும் அறியா வண்ணச் சீறடி என்பதெல்லாம் தொலைந்தது. தகைசான்ற சொற்காத்தலாகிய கடமைக்காக - யாருமில்லா ஒரு தனியளாய்-ஒட்டும் உறவும் இல்லாத அயல்நாட்டுத் தலைநகரில் - அந்நாட்டு அரசனையே எதிரியாகக் கொண்டு புலம்பிப் பொங்கும் நிலை அவளுக்கு வந்துவிட்டது. நாணம் எங்கே! மென்மை எங்கே! எல்லாம் தொலைந்தன. தொலைந்தன. அரையன்கோயில் வாயிலிலே தூண்டிய சினத்தால் ஆட்டி வைக்கப்பட்ட ஓர் அலகையென அயல்நாட்டு மன்னன் ஒருவனின் வாயிலிலே நிற்கிறாள். மண்மகளறியா வண்ணச்சீறடியாள். மென்மையின் புகலிடமாய், நிலைக்களனாய் ஒரு காலத்திருந்த கண்ணகியை வேம்பனின் வாயில் காவலன் காளி என்று வருணிக்குமளவுக்குக் கொடுமையும் உரமும் கொண்டு, நாணும் நயமும் தொலைந்து நிற்கிறாள்.

இதுவே கண்ணகியின் வாழ்வினை அவலக் கூடத்துள் திணிக்கும் வாயில்; இனி அடுத்து மன்னனையே எதிர்த்துப் பொசுக்கும் வழக்குரை காதையே அக்கூடத்தின் கருவில்லம்.

கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன் மேற்றிசை வாயில் வறியேன் பெயர்குவேன் என்று அவள் நெஞ்சத்தே பிறந்து, பெருமூச்சோடு இழைந்து மெலிகின்ற ஒலி செத்த குரலே அவளுடைய அவலக் கதையின் சுரிதகமாய்ச் சுழித்து முடிகிறது.

மதுராபுரிக் காவல் தெய்வம் கூறிய சொற்களைக் கேட்ட பின்னே கண்ணகியின் சினம் தணிந்து அவலம் தலைதூக்குகின்றது.

கீழ்த்திசை வாயில் கணவனொடு புகுந்தேன்
மேல்திசை வாயில் வறியேன் பெயர்கு

என்று அவள் நெஞ்சத்தே பிறந்து, பெருமூச்சோடு இழைந்து மெலிகின்ற ஒலி செத்த குரலே அவளுடைய அவலக் கதையின் சுரிதகமாய்ச் சுழித்து முடிகிறது.

மதுராபுரிக் காவல் தெய்வம் கூறிய சொற்களைக் கேட்ட பின்பே கண்ணகியின் சினம் தணிந்து அவலம் தலைதூக்குகின்றது.

இரவு, பகல் என்று பாராது மெல்லியல் கண்ணகி தன் கருத்துறு கணவனைக் காண்பதற்குச் செல்லுகின்றாள் ......

அவல என்னாள், அவலித்து இழிதலின்
மிசைய என்னாள் மிசைவைத்து ஏறலின்

என்று மேடு பள்ளம் அவளுடைய வாழ்வின் சீரும் சிறப்பிற்கும் அவலத்திற்கும் எடுத்துக்காட்டாகக் காட்டப்படுகின்றது என்று எண்ண வேண்டியுள்ளது. குன்றக்குறவர்களும் கண்ணகியின் நிலையைக் கண்டு துயரடைகின்றனர். அவள் அடைந்த துயரத்தைச் செங்குட்டுவனிடத்துக் கூறும் போது இது நன்கு புலப்படுகின்றது. குன்றக்குறவர்கள்,

.... வாழ்க, நின் கொற்றம்!
கானவேங்கைக் கீழ் ஓர் காரிகை
தான் முலை இழந்து, தனித் துயர் எய்தி
வானவர் போற்ற மன்னொடும் கூடி
வானவர் போற்ற வானகம் பெற்றனள்

என்று கூறுகின்றனர்.

கண்ணகி அடைந்த அவலநிலைக்குக் காரணம் என்ன என்று காண்பதோ, முடிவு செய்வதோ எளிதான செயலன்று. கண்ணகியின் இன்ப வாழ்வு சில ஆண்டுகளே நீடிக்கின்றது. கோவலனின் பிரிவ அவள் வாழ்வின் அவலத்திற்குக் காரணமாகின்றது.

அங்ஙனமாகில் கோவலன் ஏன் பிரிந்தான் என்று ஆராய வேண்டிய தேவை உண்டாகின்றது. ஏன் என்றால், ஒருவருக்கு ஏற்படும் துன்பத்தில் அவளுடைய பொறுப்பும் ஓரளவு காரணமாதல் வேண்டும். இந்த உண்மையை மறுக்க முடியாது. இதனாலன்றோ தீதும் நன்றும் பிறர் தர வாரா! என்றார் கணியன் பூங்குன்றனார். எனவே, கோவலன் பிரிவிற்கும், அவளுடைய அவல நிலைக்கும், கண்ணகி தானும் ஓரளவு பொறுப்புடையவளாகின்றாள். இதனால் கண்ணகியிடமும் குறையுண்டு என்று தெரிகின்றது; ஆனால் குறை என்று கூறுவதைக் குற்றம் என்று கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை.

கோவலன் கலையில் நாட்டமுடையவன். அதனால் குடும்பக் கலையை அன்றி நுண்கலைகளை அறியாத கண்ணகியை விட்டுப்பிரிந்து, கலையரசியாகிய மாதவியை அடைந்தான் என்று எளிதில் கூறிவிடலாம். இதுவும் ஒரு காரணமே. ஆனால் கண்ணகியிடம் கலையோ அல்லது வேறுவகைக் கவர்ச்சியோ இல்லாத குறை உண்டு என்றால், அது கண்ணகியின் குறையன்று; அன்றைய சமுதாயத்தின் குறையே ஆகும். கலைக்கு என்றே ஒரு பகுதியினரை ஒதுக்கிவிட்டது. இதனால், கலையைச் சுவைக்க விரும்பிய செல்வர் பரத்தையரை நாடினர். சங்க இலக்கியத்தில் இவ்வகைப் பிரிவுகளைப் பரக்கக் காணலாம். பரத்தையரிடம் தங்கித் தன் மனையை முற்றிலும் மறந்த நிகழ்ச்சி எங்கும் காணக்கிடைக்கவில்லை. பரத்தையர் பிரிவு நிகழ்ந்து, பின் திரும்பிச் செல்லும் தலைவனிடம் தலைவி ஊடல் கொள்ளுவதையும் காண்கின்றோம். சிலப்பதிகாரத்தில் மாதவியின் கலையில் மூழ்கிய கோவலன் கண்ணகியையும் மனையையும் முற்றிலும் மறந்து வாழ்ந்தான்................

விடுதல் அறியா விருப்பினன் ஆயினன்
வடுநீங்கு சிறப்பின் தன் மனை, அகம் மறந்து

என்று கூறுகின்றார். "கைத்தாயு மில்லை" என்று தேவந்தி கூறுவதால், கண்ணகியைக் கோவலன் வெறுக்கவுமில்லை என்பது புலனாகின்றது. கண்ணகியை மறக்கும் அளவிற்கு மாதவியிடம் காணப்பட்ட சிறப்பு ஒன்று உண்டு என்பது மட்டும் உறுதியாகக் கூறமுடியும்.

கோவலன் ஒரு காமுகன்; எனவே பிரிந்தான்; கண்ணகி இப்பிரிவிற்கு எவ்வாற்றானும் பொறுப்பாளி இல்லை; கண்ணகி நடத்திய இல்லற வாழ்வு அவன் இன்பத்திற்கு இடையூறாக இருந்தது என்று அவன் பிரிவிற்குக் காரணம் கூறுவாரும் உளர்; ஆனால் அவர்கள் கூறுவது முற்றிலும் பொருந்தாது. கோவலன் காமுகனாக மட்டுமே இருந்தான் எனப் பெரும்பழி சுமத்துதற்கில்லை. அன்றியும் கோவலன் கண்ட கனவு அவன் காமுகன் அல்லன் என்பதற்குச் சிறந்த சான்றாக உள்ளது. கோவலன் கண்ட கனவால் அவன் உள்ளத்தை இளங்கோவடிகள் நமக்குக் காட்டுகின்றார். அதில் அவன் கண்ணகி, மாதவி, மணிமேகலை ஆகியோரிடம் கொண்ட அன்பையே காண்கின்றோம். எனவே கண்ணகியைப் பிரிந்த கோவலன் ஓர் காமுகனல்லன் என்பதும் தெளிவு.

கலை காரணமாகப் பிரிந்த கோவலன் தன் மனைவியையும் மனையையும் மறக்கக் காரணம் ஒன்றுதான் கூறமுடியும். அதுதான் ஊடல். கண்ணகியிடம் காணப்படாத ஊடல் மாதவியிடம் காணப்பட்டது. கனவுகள் பொருளற்றன அல்ல. உடற்கோளாறுகளாலும், உள்ளக் கோளாறுகளாலும் கனவுகள் தோன்றும். எவ்வகைக் கோளாறும் இல்லாச் சமனிலையிலும் கானா எழுவதுண்டு. இவ்வாறு மூவகைப்பட எழுகின்ற கனவுகள், அவற்றைக் காண்பாரின் உள்ளப் பாங்கினைத் தெளிவுறுத்துதற்குச் சிறந்த கருவிகளாம். புறமனம், அகமனம், அபுமனம், ஆகிய முப்பாற்பட்ட மனத்தின் எண்ணப்படிவுகளைக் கனவுகள் வாயிலாக ஆராய்ந்தறியலாம். கோவலன் கண்ட கனவு அவனுடைய காம வெறியைக் காட்டுவதாக இல்லை. மணிமேகலையாகிய தன் மகளின் நினைப்பிலே தோயும் மாண்புடையதாக அவன் உள்ளத்தைத் தெளிவுறுத்துகிறது. இஃது எண்ணிப்பார்த்தற்கு உரியது.

அவ்வாறாயின் மாதவியைப் பிரிவதற்குக் காரணம் என்ன? எனில் அங்கும் ஊடலே, என்ற பதில் திருவள்ளுவர்.....

"உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல்"

என்று கூறுகின்றார். எனவே, கண்ணகியின் வாழ்வில் ஊடலின்மையால் சுவையற்றதாய் மாறியது. மாதவி கலவியால்

மகிழ்ந்தாள் போலப் புலவியால் யாழ் வாங்கிக் கானல்வரி பாடுகின்றாள். அவளுடைய ஊடல் உப்பு உணவில் மிகையானால் கைப்பதுபோல நீள்கின்றது. அதை அவளே உணர்கினறாள் என்பது கானல்வரியின் இறுதியில் தெளிவாகின்றது.

"தூக்காது துணிந்த இத்துயர் எஞ்சு கிளவியால்
பூக்கமழ் கானலில் பொய்ச் சூள் பொறுக்க என்று
மாக்கடல் - தெய்வம்! நின் மலர் அடி வணங்குதும்"

என்று ஊடல் நீடியதைப் பொறுக்க முடியாமல் பாடி வணங்குகின்றாள் .... ஆனால், நேரங்கடந்த உணர்வாய் மாதவியின் துறை முடிகின்றது. கோவலன் பிரிந்து விடுகின்றான். மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம் சென்ற கோவலன், கண்ணகி தான் பரத்தையின்பால் பிரிந்ததைக் குறித்து ஊடல் கொள்ளுவாள் என்று எண்ணித் தன்னிலைக்கு வருந்துவதாகக் கூறுகின்றான். ஆனால் கண்ணகி நகைமுகம் காட்டிச் சிலம்பைத் தருகின்றாள். - இங்கும் கண்ணகியிடம் ஊடலைக் காணவில்லை. எனவே, கண்ணகி அடைந்த அவலத்திற்குரிய காரணம் ஒரு வகையில் தெளிவாகின்றதன்றோ!

கோவலன்

கோவலனுடைய அவலநிலையை மாதவியைப் பிரிந்த பின்பே ஓரளவு நாம் உணரமுடிகின்றது. கண்ணகியின் முன் நிற்கும் கோவலன் தன் நிலைக்கு இரங்குகின்றான்.

".......... .... யாவும்
சலம் புணர் கொள்கைச் சலதியொடு ஆடி
குலம் தரு வான் பொருள் குன்றம் தொலைந்த
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு"

என்று கூறுகின்றான். கண்ணகியின் அவலத்திற்கும், மாதவியின் அவலத்திற்கும் கோவலன் ஓரளவு பொறுப்பாளியாகின்றான் என்பது உண்மை. ஆனால் இரண்டு பெண்கள் வாழ்விழந்து உழலும் நிலைக்குக்

காரணமாகிய கோவலனுடைய கொலை நம் காப்பியத்தில் அவலச் சுவையை ஓங்கச் செய்கின்றது. கோவலன் இறந்ததற்கு வருந்துகின்றோம். எனவே கோவலன் கெட்டவன் என்ற எண்ணமிருக்குமேல் நமக்கு அவலம் தோன்ற வழியில்லை. அவனுடைய நல்ல பண்புகளால் அவனிடம் ஒருவகைக் கழிவிரக்கம் நம்மாட்டுத் தோன்றுகின்றது. கோவலனைக் கெட்கடவனாகப் படைத்திருக்கலாம். ஆனால் கெட்டவனாக வாழ்ந்து கெட்டவனாக மாய்ந்திருப்பானாகில், அவன் வாழ்வில் அவலச்சுவை காண்பது அரிது. அவனிடம் காணப்பட்ட சில பண்புகளாலும், ஆசிரியர் அவனை நம்மிடையே காட்டும் முறைகளாலும் அவன் கொலையுண்டபோது அவலம் தோன்றுகின்றது. கோவலனைச் சிலம்பில் காட்டும் முறையைக் காண்போம்.

புகார்க்காண்டத்தில் கோவலனுடைய இன்ப வாழ்வு, மிக்க விரைவில் செல்லுகின்றது. ஆனால் மதுரைக் காண்டத்திலோ அவன் வாழ்வு அசைந்து செல்கின்றது. விரைவில் மறைந்த கோவலனின் இருவகைப் பிரிவுகளையும் மறந்து, மெதுவாகச் செல்லும் துன்பவாழ்வில் கோவலனுடைய பண்புகளைக் காண்கின்றோம். மனிதனுக்கே உரிய சில குறைகளில் நிறைவுடையவனாகக் காட்சியளிக்கின்றான் கோவலன்.

கோவலன் கொலையுண்ட நிகழ்ச்சியால் நாம் எவ்வகை உணர்ச்சியை அடைகின்றோம்? கண்ணகி கலையாத துன்பம் அடையப் போகின்றாளே என்பதற்காக மட்டுமே நாம் வருந்துகின்றோமா? இல்லை மறுமலர்ச்சி பெறப்போகும் ஒரு வாழ்க்கை - நல்லான் ஒருவனும் நல்லாள் ஒருத்தியும் இணைந்து வாழவிருக்கும் ஒரு வாழ்க்கை பொசுங்கிவிட்டதே என்ற நினைப்பே கோவலன் கொலையால் ஏற்படுகின்றது. நெஞ்சமும் நினைப்பும் மாறிய கோவலன் - இயற்கையாவே குன்றாக் கொள்கைக் கோவலனாக இருந்து, இப்போது குன்றின் மேலிட்ட விளக்காக ஆகிய கோவலனோ அழிவது என்று நாம் வருந்துகிறோம். எனவே, கோவலன் கொலை சிலம்பிலே குமிழியிட்டோடும் அவலப் பெருக்கிலே சுழிலடும் ஒரு சுழியாகும் என்பதில் ஐயமில்லை.

உணர்ச்சிக்கு உறைவிடமாகத் திகழும் கோவலன், ஒழுக்கமும் உயர் குணமும் உடையவனாய்த் தோன்றுகின்றான். கோவலனுடைய பெருமையைக் கண்ணகியோடு சேர்த்து விளக்குதற்கே கவுந்தியடிகள் வருகின்றார். பரத்தையர் சேரி வாழ்வு காரணமாகக் கண்ணகியின் பிரிவும், மாதவியின் பிரிவும் கோவலன் வாழ்வில் நேர்கின்றன. இதற்கெல்லாம் கோவலனிடம் காணப்பட்ட பொச்சாப்பே காரணமாம். உணர்ச்சியின் வடிவாகத் திகழும் கோவலன் கலையுணர்ச்சியுடையவனாகக் காட்டப் பெறுகின்றான். மாதவியோடு வாழும் போதும், தற்பெருமை இல்லாத கோவலன் தன்னிற்றானே நம்பிக்கை இழக்கின்றான். மாதவியின் மனத்தை அடிமை கொள்ளும் பெருமை தனக்குண்டு என்பதில் அவனுக்கே ஐயம் எழுகின்றது. உலகம் முழுவதும் மாதவியின் கலையழகில் ஈடுபடுந்தோறும் இந்த ஐயம் ஓங்கி வளர்கின்றது. மாதவியைப் பிரிகின்றான். ஆயினும், மாடலன் அவன் சிறந்த பண்புகளைக் கூறும்போது சமுதாயத்தில் ஓர் உயர்ந்த குறிக்கோளுடன் வாழ்பவனைப் போலவே காட்சியளிக்கின்றான். காற்றினை இளங்கோவடிகள் அவனுக்கு உவமை கூறுகின்றார். எல்லாவற்றோடும் கூடிக்கலந்து வந்தாலும் பிறர் அதனை மாறாக உணர்ந்தாலும் - காற்றென்பது தன் தன்மை மாறாது நிற்கும். அது கொண்டுவரும் துகள்களை அதுவாகப் பிறர் மயங்கினாலும் உண்மையில் அது மாறுவதில்லை அத்தகைய காற்றில் சிறந்த தென்றல் போன்றவன் கோவலன்.

மொத்தமாகப் பார்த்தால் அவனுடைய குறைகள் அவனுடைய கொலையை அவலமானதாக்கவில்லை; கோவலனிடம் காணப்படும் நற்பண்புகளையும், உயர்குடியையும் எண்ணும் போது அவன் வாழ்வு அவலமாகின்றது. சிலம்பில் வரும் ஒவ்வொரு பாத்திரமும் கோவலனிடம் தன்னன்பையும் பாசத்தையும் புலப்படுத்துகின்றனர். கண்ணகியின் காதல் அளவிடற்கரியது. மாதவியின் காதல் அவளுடைய கடிதத்திலும், பின்பு கோவலன் கொலையுண்ட போது அவளுடைய செய்கையாலும் புலப்படுகின்றன. சமண சமயத்தலைவியரான கவுந்தியடிகள் இடைவிடாது பல நாட்கள் உடனிருந்து பழகிக் கண்டு வந்தபோதும் குற்றமொன்றும் காணாது அவன் உயர்வையே எண்ணி அவனுடைய துயரத்திற்கெல்லாம் ஒப்புமை கூறுவார். இராமனையும் நளனையுமே எண்ணகின்றார்; வல்வினையின் பிழை என்றே கூறுகின்றார். மாடலன்

இம்மைச் செய்தன யானறி நல்வினை உம்மைப் பயன்கொல்? என்று கோவலனிடம் மதிப்பும், பணிவும் கொண்டவனாகக் காட்டப்படுகின்றான். ஐயைக்கும் மாதரிக்கும் கோவலனும் கண்ணகியும் கண்ணனும், நப்பின்னையுமாகவே காட்சியளிக்கின்றனர். அன்றியும் அவனிறந்த துயரத்தினைப் பொறுக்கலாற்றாது அவன் தாய் இறக்கிறாள். கவுந்தியும் இறக்கின்றார். அவன் தந்தையும், மாதவியும் துறக்கின்றார்கள். இந்த நிகழ்ச்சிகளிடையே கோவலன் இறப்பு ஓர் அவலக் காட்சியாய் அணி செய்கின்றது. அவனுடைய அவல மரணமே நடுமையாக இருந்து ஏனைய அவல நிகழ்ச்சிகளுக்குக் காரணமாகின்றது. இளங்கோவடிகள் கோவலன் குணநலன்களைப் படம் பிடித்துக்காட்டுவதில் சிறிது கவனக்குறைவாய் இருந்திருப்பாரேல், நாம் கோவலனைப் போற்றமாட்டோம்; அவனுடைய அவலமுடிவை (Tragic end) அவலமாக எண்ணியிருக்கமாட்டோம்.

மாதவி

பொதுவாக மாதவியைக் காணும் போது நம்முடைய கண்முன் அவள் ஆடலும், பாடலும் அழகும் காட்சியளிக்கின்றனவே அன்றி அவளுடைய அவல வாழ்வு நினைவிற்கு வருவதில்லை. கோவலன் அவளை விட்டுப் பிரிந்ததும் மாதவி படும்பாடும், மாலை வாரா ஆயினும், மாண் - இழை காலை காண்குவம் என்று ஏங்கும் காட்சியை இளங்கோவடிகள் காட்டுகின்றார். மாதவி எழுதும் முதல் கடிதத்திற்கும் இரண்டாவது கடிதத்திற்கும் உள்ள வேறுபாடு, அவள் வாழ்வில் வைத்திருந்த நம்பிக்கையின் தளர்ச்சியை நன்கு காட்டுகின்றது கோசிகமாணி மாதவி அடைந்த துயரத்தைக் கூறுகின்றான், அவனே வருந்துகின்றான், கோவலனையும் மாதவியின் குற்றமற்ற தன்மையையும் உணரச் செய்கின்றான்.

வட நாட்டில் செங்குட்டுவனைச் சந்தித்த மாடலன்,

வாழ்க, எம் கோ மாதவி மடந்தை
கானல் - பாணி கனக - விசையர் - தம்
முடித்தலை நெரித்தது

என்று கூற, அதைக் கேட்ட குட்டுவன் அவன்தன் கூற்றை அறியும்படி கூறச் சொல்கின்றான், மாதவி கடல் விளையாட்டினுள் ஊடற்காலத்துக்

கூடாது பிரிந்து, பின் கோவலன் மதுரை சென்று இறப்ப, அதை அறிந்து தன் வாழ்வை மட்டுமல்லாமல், தன் மகள் மணிமேகலையின் வாழ்வையும் கணிகையர் கோலம் காணாது ஒழியும்படி துறவுக்கோலம் பூண்டதாக அறிவிக்கின்றான். எனவே மாதவி வாழ்வில் ஏற்படும் ஏமாற்றம், இன்பவாழ்விற்கு அவலத்தையுண்டு பண்ணித் துறவறத்தை மேற்கொள்ளச் செய்கின்றது. மாதவி அறியாது செய்த பிழை அவள் வாழ்வின் அவலத்திற்குக் காரணமாகின்றது.

பாண்டியன் நெடுஞ்செழியனும் பாண்டிமாதேவியும் - தன் தவற்றைத் தானே உணர்ந்து உயிர்துறக்கும் காட்சி நம் உள்ளத்தில் பதியவில்லையா?

"தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன்
பொன் செய் கொல்லன் - தன் சொல்கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்"

மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என் முதல் பிழைத்தது கெடுக என் ஆயுள்

என மயங்கி வீழ்ந்ததாகக் கூறுகின்றார். சில வினாடிகளில் அவன் உயிர் துறக்கின்றான்.

.... தென்னவன்
கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கி
கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதுஇல் என்று
இணை அடி தொழுது வீழ்ந்தனளே"

என்று பாண்டியமாதேவியின் துயரமும் சில வினாடிகளில் மறைந்து விடுகின்றது. பாண்டியனின் மரணம் குற்றம் புரிந்தவனுக்கு ஏற்பட்ட தண்டனையாக நாம் கருதக்கூடாது என்றும், அவன் மரணம் ஓர் அவல மரணமாகத் தோன்றி நம் உள்ளத்தில் ஈவும் இரக்கமும் குடிகொள்ள வேண்டும் என்றும் இளங்கோவடிகள் அரும்பாடுபடுகின்றார். செங்குட்டுவன் பாண்டியனின் அவல மரணத்திற்கு வருந்துவதாகக் கூறுகின்றான்.

சாத்தனாருக்குப் பாண்டியன் கொடுங்கோலனாகத் தோற்றமளிக்கின்றான். ஆனால் இளங்கோவடிகள் பாண்டியனின்

அவல மரணத்திற்கு நாம் இரங்க வேண்டும் என்று விரும்புகின்றார். சாத்தனார் கண்ணகியின் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறும் போது வஞ்சி மகளிரெல்லாம் பாடும் போது பாண்டியன் பெருமையை எடுத்தியம்புகின்றனர்.

"செங்கோல் வளைய, உயிர் வாழார் பாண்டியர் என்று
எம்கோ முறை நா இயம்ப" ....

என்று ஆடிப்பாடுகின்றனர். இவ்வாறெல்லாம் கூறிய பின்பு பாண்டியன் நல்லவன், ஏதோ அறியாது செய்த பிழையால் தானே வருந்தி மாண்டான் என்று எண்ணுகின்றோம்.

பாண்டியனைப் பல நாட்கள் உயிர்வாழச் செய்து தன் பிழைக்கு வருந்தி உயிர் துறக்கும்படிச் செய்திருந்தால், ஆங்கு அவலம் நன்கு தோன்றியிருக்க வழியுண்டு, ஆனால், அஃது தமிழர் பண்பாட்டிற்கு ஏற்றதோ?

"கணவனை இழந்தோர்க்குக் காட்டுவதுஇல்"

என்று கூறி உடன் உயிர்துறந்த பாண்டியமாதேவியின் அவல மரணம் இளங்கோ - வேண்மாளால் போற்றப்படுகின்றது. இதே நிலையில் கண்ணகியை எண்ணினால் நம் துயரம் மேலும் வளர்கின்றது.

முடிவு

இங்ஙனம் காப்பியத்தில் வரும் இன்றியமையாத பாத்திரங்களாகிய கண்ணகி, கோவலன், கவுந்தி, பாண்டியன், பாண்டியமாதேவி, மாதரி, கண்ணகியின் தாய், கோவலனின் தாய் ஆகியோர் இறந்துவிடுகின்றனர். மாதவியின் இன்பவாழ்விற்கு அழிவு ஏற்படுகின்றது. மாதவி எண்ணியிருந்தால் இன்பவாழ்வு வாழ்ந்திருக்க முடியும். விஞ்சையர்களும் வியக்கும் அவளுடைய கலை அழிந்து விட்டதே என்று நாமும் வருந்துகின்றோம். அந்நாட்டு அரசனும் மக்களும் வருந்தியதைத் தேவந்தி,

"ஆங்கு, அது கேட்ட அரசனும் நகரமும்
ஓங்கிய நல் மணி உறு கடல் வீழ்ந்தோர்"

என்று கூறுகின்றாள்.

மணிமேகலையின் துறவும்,
"பருவம் அன்றியும் பைந்தொடி நங்கை
திருவிழை கோலம் நீக்கினள் ஆதலின்
அரற்றினென்"

என்று மணிமேகலையின் பரிதாப நிலை கூறப்படுகின்றது. இங்ஙனம் பாத்திரங்கள் அடைந்த அவல நிலைகளையும், நிகழ்ச்சிகளையும் மட்டும் காண்பதால் சிலப்பதிகாரம் அவல நாடகக் காப்பியம் ஆகாது, சிலம்பின் முடிவு அவல முடிவாய்க் காணப்படல் வேண்டும்.

முடிகெழு வேந்தர் மூவர்க்கும் உரிய ஒற்றுமைக் காப்பியமாகக் காட்டுவதற்கு இளங்கோவடிகள் வஞ்சிக் காண்டத்தையும் அமைத்தார் எனில் மிகையாகாது. பதிக ஆசிரியர் நூலை வகுத்த முறை கூறும் போது

"கட்டுரைகாதையும், மட்டுஅலர் கோதையும்
குன்றக் குரவையும் - என்று இவை அனைத்துடன்"

என்று குன்றக்குரவையோடு கதை முடிவதைக் காட்டி இனி இளங்கோவின் குறிக்கோளாகிய பத்தினி வழிபாட்டை நிலைநிறுத்த இளங்கோ வஞ்சிக் காண்டத்தை எழுதுகின்றார் என்று குறிப்பாகச் சுட்டுகின்றார். மதுரைக் காண்டத்துடன் கதையை முடித்துவிடுகின்றார். ஆதலின் சிலம்பில் அவல முடிவையே காண்கிறோம். எனவே, சிலப்பதிகாரம் ஓர் அவல நாடகக் காப்பியம் என்பது வெள்ளிடை..

ஊழ்வினையை அவலத்தின் கருத்தா என்பது பண்டைக் கிரேக்கர் கோட்பாடு. பாண்டியன் செங்கோல் நெறியினன் என எங்கணும் போகிய இசையோ பெரிது. வளையாத செங்கோல் உடையவன்.

"மறை நா ஓசையல்லது .... கோலனும் அல்லன்" என்று மதுராபதித் தெய்வத்தால் புகழப்பட்டவன். இத்துணைச் சீரியோனின் வாழ்வு சிதைவது என்றால், அதனை நிகழ்த்துவிக்கும் ஊழின் கொடுமையினை என்னென்பது. மேலும், அவனை நினைத்து நம் மனத்தே தலையெடுக்கும் இரக்கத்தையும் விழுங்கி ஓங்குகின்றது அச்ச உணர்ச்சி, ஊழ், கழிவிரக்கம், அச்சம் இம்மூன்றையும் இணைத்து அவல முடிச்சாக நம்முன் நிறுத்துகிறார் அடிகள்.

பெரியபுராணக் காப்பிய ஒருமை

௫. ஆயுதம் தாங்கிய அன்பின் கொடுமுடி

பேராசிரியர், முனைவர், சுப. அண்ணாமலை

அன்பு இளகிய நெஞ்சத்தின் ஈர நிலமாகத் தான் விரியும் என்பது இல்லை. வீரம் விளையாடும் வன்மைக் களமாகவும் விளங்கும். அடியார் பொருட்டுத் தொண்டர் மனத்தில் எழுந்த அன்பின் நெகிழ்ச்சியையும், பணிவுடைமையையும், தியாக எண்ணத்தையும், முற்போந்த வரலாறுகளில் கண்டோம். அடுத்துவரும் வரலாறுகள், அடியார் பொருட்டுத் தொண்டர் ஆயுதந்தாங்கி, வீரம் விளைத்து, அதன்பின் கொடுமுடியை அடைந்தமையைக் காட்டுகின்றன.

ஓர் அடியார், அடியார்களுக்கு நேரும் வன்முறைத் தீங்கினைத் தீர்த்துக்கட்டுவதே வாழ்க்கைப் பணியாகக் கொண்டு, மழுவாயுதமும் கையுமாக இருந்தார். ஓரடியார் மன்னர் குலத்து இளைஞர்க்கு வாட்போர் பயிற்றி அதன் வருவாய் கொண்டு, வாணாள் எல்லாம் அடியார்களுக்கு வேண்டுவன நல்கியதோடு, போர்க்களத்தில் தம்மோடு பொருத பங்காளியின் வஞ்சகச் சிவவேடம் கண்டு, சிவனடியார்க்கு ஊறு செய்யேன் என்ற தமது கொள்கை கடைப்பிடித்து அவனால் கொல்லப்பட நின்றார். மற்றுமோர் அடியார் சிவலிங்கத்தை, நகமும் சதையுமாக உள்ளமும் உணர்ச்சியுமாக உயிரோடு இருப்பவராகவே கண்டு, அவர்மேல் அன்பை மழையெனப் பொழிந்து அவர் கண்ணில் குருதி வடிந்த போது, பதைபதைத்து, மூலிகை பிழிந்தும் அது நில்லாமை கண்டு, தம் கண்ணையே அம்பினால் தோண்டி அப்பினார். இவையாவும் அன்புப் பெருக்கின் வன்மைப் பரிணாமம்.

“அன்பின் மென்மைப் பரிணாமமாகிய முன்னை வரலாறுகளை, இவை முரண்” என்னும் வகையில் தொடர்கின்றன. வைப்பு முறையில் ஒப்புடைமை மட்டுமே காரணமாகக் கொள்ளவேண்டும் என்று வாதிடப்படலாம். முன்னர் எடுத்துக்காட்டிய இலக்கியத் திறனாளி ரோஜர்சேலின் கருத்துப்படி முரணையும் காரணமாகக் கொள்ளலாம். முறையே விளக்கமும், மயக்கமும் தரும் பகலும், இரவும் சேர்ந்து ஒரு நாள் என ஒருமைப்படுதல் போல ஒப்புமையும் முரணும் சேர்ந்து காப்பிய ஒருமையைத் தோற்றுவிக்கின்றன.

வன்றொண்டருள் முதலாமவர் கரூரில் வாழ்ந்த எறிபத்தர். இவர் அன்பர்க்கு அடாதன அடுத்தபோது முரண் கெட எறிந்து தீர்க்கும் பரசுமுன் எடுக்கப்பெற்றார்-சிவனடியார்க்கு வன்முறைத் தீங்கு நடக்கும் போது.

அதைச் செய்தோரின் செருக்கழிய மழுவாயுதத்தினால் அவரைத் தண்டித்தும் வந்தார் - எனச் சேக்கிழார் கூறுதலால், இவர் பெயரும் காரணப்பெயர் என்றே தோன்றுகிறது.

அந்நகரில், ஆனிலை என்னும் திருக்கோயிலில் மலர்ப்பணி செய்து வந்த சிவகாமியாண்டார் என்ற முதிய சிவனடியார், ஒரு நாள் காலை வழிபாட்டிற்கு மலர் கொய்து, கூடையில் வைத்து, தண்டை ஊன்றித் தெருவில் நடந்தபோது, சோழ மன்னனின் பட்டத்து யானை மதங்கொண்டு அத்தெருவில் ஓடி, அப்பூக்கூடையை இழுத்துப் பறித்துச் சிதறிவிட்டு ஓடியது. அதனைச் செலுத்திய பாகர் அதனை அடக்கமாட்டாமல் கையுதறிச் சென்றனர். முதியவர் தண்டை ஓங்கிக்கொண்டு அதன் பின்னே, அடிப்பதற்காக ஓடினார். தள்ளாடி வீழ்ந்து, சினமும் ஆற்றாமையும் பொங்க சிவதா (சிவனே முறையோ?) என்று கதறினார்.

அண்மையில் எங்கோ இருந்த எறிபத்தருக்கு இம்முறையீடு செவியில் ஒலித்தது. ஓடிவந்து, முதியவரிடம் செய்தியறிந்து, யானையைப் பின்தொடர்ந்து ஓடி, சில நொடிகளில், அதன் எதிரே பாய்ந்தார். சினங்கொண்ட யானை அவர் மீது பாய்ந்தது. அச்சம் தாயன்புக்கு முன் நிற்குமோ? அதனை மறித்து ஆண்மையோடு பாய்ந்த எறிபத்தர், அதன் துதிக்கையை வெட்டி வீழ்த்தினார். அக்கையன்றோ மலர்க்கூடையைப் பறித்துச் சிவாபராதம் செய்தது? அவ்வலி பொறுக்கலாற்றாமல் மதயானை நிலத்தில் விழுந்து, புரண்டு, மடிந்தது. அத்துடன் அமையவில்லை அடியார் காவலர்; யானையைத் தடுக்காத குற்றத்திற்காகப் பாகர்களையும் கொன்றார். பின்பு அகன்றுவிடவில்லை. அரச நீதிக்குத் தக்க செய்திகூற வேண்டுமென்றோ? தாம் குற்றம் புரிந்ததாக அவர் எண்ணவில்லை. தமது கொள்கைப்படி சைவநீதி செலுத்தியதாகவே எண்ணினார். அரசநீதியாதாயினும், அதனை ஏற்கச் சித்தமாக நெஞ்சு நிமிர்த்தி அஞ்சாமல் நின்றார். இரண்டு கைகளையுடைய வேறு ஒரு யானை மழுவேந்தி நின்றாற்போல நின்றார். விடுசுடர் மழுஒன்றேந்தி வேறிரு தடக்கைத் தாய மழகளிறு என்ன நின்றார் என்கிறார் சேக்கிழார்.

தலைநகர் உறையூரை விட்டுச் சில நாள் தங்கலுக்காகக் கரூர்க்கு வந்திருந்த புகழ்ச் சோழனுக்கும் பட்டத்து யானையைச் சிலர் கொன்றார் என்று செய்தி போயிற்று. சினங்கொண்டு புறப்பட்டவனோடு படைகளும் புறப்பட்டன. குதிரைமீது ஏறிப் 'போர்க்களம்'' என்று அவன் கருதிய - ஈட்டிக்காரரால் காட்டப்பட்ட - இடத்திற்குச் சென்ற மன்னன் அங்குப் பகைவர் ஒருவரையும் காணாமல் சிவனடியாரைக் கண்டு, அருகில் புரளும் மதயானையை அவர் கொன்றார் என்று சிறிதும் எண்ணாமல் "வென்றவர் யார்?" என்று இடிபோல் முழங்கினான். அதனை வெல்லாமல் கொல்ல

முடியாது ஒரு வீரனே வெல்லக்கூடும் சிவனடியார் வீரர் அல்லர் என்பது அவன் கருத்து.

அங்குப் பகைவர் வந்துவிடவில்லை; ஆனால் அரசன் பகைவீரன் ஒருவன் யானையைக் கொன்றதாக எண்ணுகிறான் என்று அவனுக்கு உண்மையை உணர்த்த விரும்பி அங்கு நின்ற பாகர்கள் உன் யானையை எதிர்க்கும் வீரம் எந்த மன்னனுக்கு உண்டு? அதோ மழுவுடன் நிற்கிறாரே, அவர் தாம் தீங்கிழைத்தார் என்று கூறினார் கேட்ட மன்னன் பிழை நேர்ந்திருந்தால் அன்றி அடியார் கொல்லார் ஏதோ தவறு நிகழ்ந்திருக்கிறது என்று முடிவு செய்து குதிரை விட்டிறங்கி படைகளை உடன் வரவேண்டாம் என்று நிறுத்தி, எறிபத்தரை நோக்கிச் கை குவித்துச் சென்று "அடியேன் இதனை அறியவில்லை அங்குச் கேட்ட செய்தி வேறானது இந்த யானை செய்த குற்றம் அதனையும் பாகரையும் கொன்றமையால் தீர்வு பெற்றதா? அருள் செய்யும்" என்றான்.

அவர் தம் தண்டனைக்குக் காரணம் கூற "சிவனடியார்க்குச் செய்த இவ்வபராதத்திற்கு இத்தண்டனை போதாது என்னையும் கொல்லவேண்டும்" என்றான். அவன் அன்பு எறிபத்தரது அன்புடன் ஒரு நிகராக உயர்ந்து நின்றது. தன்மையால் மட்டுமன்று வன்மையாகப் பரிணமிப்பதிலும் இணையாகிறது. அவ்வாறு சொல்லியதோடு அமையாமல் மங்கல மழுவினால் அன்று; இவ்வாளே அமையும் எனத் தன் உடைவாளை உருவி, எறிபத்தரிடம் நீட்டினான், சிவனடியார்க்குத் தீங்கு நேராமல் காக்கும் பொருட்டு ஒரு தொண்டர் ஆயுதமேந்தி உலவுகின்றாரென்றால் அத்தீங்கு தனது பரிவாரத்தால் உண்டாகக்கூடாது மாறாக, தீங்கு நடந்தால் அதற்கு அரசனே பொறுப்பு என்று எண்ணியது அவனது நீதியுள்ளம். இவ்வெண்ணத்திற்குக் காரணம் அவனுப் சிவனடியாரிடம் அன்பு கொண்டிருந்தமையே ஆகும்.

மன்னனது அளவற்ற அன்பைக் கண்ட எறிபத்தருக்கு அவன் நீட்டிய வாளை வாங்க மனமில்லை. வாங்காமல் நின்றால் தன்னுயிரை மாய்த்துக்கொண்டு விடுவானோ என்று அதை வாங்கினார். மகிழ்ந்து நின்றான் மன்னன். திடுக்கிட்டார் எறிபத்தர். தன்னை மாய்த்துக் கொள்வதினின்று அவனைத் தடுக்கவே வாளை வாங்கினார். அவனோ அவர் கொள்வார் என்று மகிழ்கிறான். என்ன செய்வார் எறிபத்தர் அன்பினால் உண்டாகிய இந்த இடர்ப்பாட்டில், சட்டென ஒரு முடிவுக்கு வந்தார். வாளைத் தம் கழுத்தில் வைத்து அறுக்கலானார் பேரன்பனாகிய மன்னனைக் கொல்ல நின்றார் என்று வரக்கூடிய பழிக்கு அஞ்சி முன்னதாக உயிர்விடத் துணிந்த அன்பின் கொடுமுடி இது.

அவரை மன்னன் விரைந்து தடுக்க அவர் தம் செயலை விடாமல் தொடர-அந்த அன்புத் துன்பத்தை வானில் எழுந்த ஒரு வாக்கு நீக்கியது. போர்க்களத்தில் பகை வீரரைக் கொல்லும் ஆண்மை உடைய ஒரு மன்னனும்,

அடியார்க்கு தீங்கிழைத்தோரைக் கொல்லும் கொள்கை உடைய ஒரு சிவத்தொண்டரும் தத்தமில் கொண்ட அன்பினால் தம் உயிரைத் தியாகம் செய்ய, அதே வன்முறையை வெளிப்படுத்துவதில் ஒருவரை ஒருவர் விஞ்சி நிற்கும் காட்சி இது.

அடுத்து போற்றப்படும் ஏனாதிநாதர் வாளேந்திப் போரிட்ட ஆண்மைக்களத்திலேயே அன்புக் கசிவின் ஈரத்தை வெளிப்படுத்தியவர். சோழநாட்டு எயினனூரைச் சார்ந்த ஈழக்குல வீரர். மன்னர் குடியினர்க்கு வாள் பயிற்றும் தொழிலினர். அதில் பெற்ற வருவாயை அடியார்களுக்கு உதவும் பணியை மேற்கொண்டார். அவர் பங்காளிகளுள் ஒருவனாகிய அதிசூரன் என்பவன், தன்னை விட வாள் திறம் மிக்கவர் இல்லை என்று செருக்குற்று, பொறாமையால் ஏனாதிநாதரைப் பகைத்து, தன் சுற்றத்தோடு சென்று அவரைப் போருக்கு அழைத்தான். பங்காளியின் அறைகூவலை ஏற்பது முறையாதலின் ஏனாதிநாதரும் போர் செய்ய இசையவே, இரு திறத்து வீரர்க்குமிடையே போர் நிகழ்ந்தது. இரு பக்கமும் பலர் மடிந்தனர். அதிசூரன் தோற்றான். பின்னும் பொறாமை நீங்காமல் ஏனாதிநாதரை வஞ்சகத்தால் கொல்லக் கருதினார். அவருக்கு, நமது மாறுபாட்டைத் தீர்த்தற்கு நாட்டாரைக் கொல்லத் தேவையில்லை. ஆதலின் நாம் தனியே போரிடுவோம் என்று தூதனுப்பினான். அவரும் அதற்கு இசைந்து அவன் குறித்த நாளில், குறித்த இடத்தில் தம் சுற்றத்தார் அறியாமல் சென்று, அவன் வரவுக்காகக் காத்திருந்தார்.

வஞ்சக எண்ணத்தோடு அவரை அங்கு வரச்செய்த அதிசூரன், திருநீறு பூசிய அடியார்க்கு அவர் தீங்கு செய்யார் என அறிந்தவனாதலின், நெற்றி நிறைய வெண்ணீறு பூசி, அதைக் கேடயத்தால் மறைத்துக் களத்தில் புகுந்தான். வாட்போர் தொடங்கியது. அவனைக் கொல்லும் சூழல் ஒன்று வர, ஏனாதியார் சிறிது இடம் பெயர்ந்தார். அந்நேரம், தன் நெற்றியை மறைத்த கேடயத்தை விலக்கினான் அதிசூரன். திடுக்குற்றார் ஏனாதிநாதர். அவர் ஓங்கிய வாள் அப்படியே நின்றது. அவருள்ளத்தில் அன்பு சுரந்தது. இவரை நான் கொல்லமாட்டேன். இவர் என்ன எண்ணுகின்றாரோ அதைச் செய்க என்று வாளைக் கீழே போட எண்ணியவர், அடுத்த கணம் மனம் மாறி ஆயுதம் இல்லாதவரைக் கொன்றார் என்ற பழி ஒரு சிவனடியார்க்கு வரக்கூடாது என வாளை ஓங்கியவாறே நின்றார். வஞ்சகன் தான் எண்ணியதை முடித்தான்.

கனன்று எரியும் நெருப்புக்கங்கின் இடையே தண்ணீர் துளிக்குமா? கொதிக்கும் பாலைவன மணலில் செடி முளைக்குமா? அதுபோல் ஆண்மை விளையாடும் வாள்முனையில் அன்பு தலைகாட்டுமா? ஏனாதிநாதரின் உள்ளத்தில் அன்பு தலைக்காட்டியது மட்டுமன்று, தழைத்து வளர்ந்தது.

பழுத்துத் திகழ்ந்தது. பகைவனாக இருந்தவன் சிவனடியானாகிவிட்டான் அவனைக் கொல்லலாகாது என்ற அன்பே உச்சமானது நிராயுதபாணியைக் கொன்றான் என்ற பழி, அந்த அடியவனுக்கு வரக்கூடாது என்று எண்ணிய அன்போ, அதனினும் உச்சமானது. இந்தப் பேரன்பில் அவர் தம்மை, தம் மானத்தை "நாம்" என்ற எண்ணத்தை அர்ப்பணித்துவிட்டார். சேக்கிழார் இதை "பற்றலர்தம் கைவாளால் பாசம் அறுத்தருளி" என இறைவனின் திருவருட் செயலாகக் கூறுகின்றார்.

அடுத்து வரும் தொண்டர் கண்ணப்பர். திண்ணன் என்னும் இயற்பெயரினதாயிருந்து தமது அன்புச் செயலால் இறைவனால் கண்ணப்பா (கண் தந்த தந்தையே) என அழைக்கப்பெற்றவர் வன்மையை அன்றி மென்மையை அறியாத வேடர் குலத்தில் பிறந்து அப்பிறப்பியல்புக்கு வளர்ப்புச் சூழ்நிலைக்கும் மாறாக அன்பில் முதிர்ந்து நின்றவர் இறையன்பால் மனம் நெகிழ்ந்துருகிப் பாடியவராகிய மாணிக்கவாசகர், கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின் என் அப்பன் என் ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி என்று பாடுவராயின் திண்ணனாரின் அன்பை அளவிட்டுரைக்க முடியுமோ?

ஆறே நாளில் தோன்றி வளர்ந்து கனிந்தமை அவர் அன்பின் தனிச்சிறப்பு. குடுமித் தேவரை முன்பு அறியாத அவர், அப்பெருமான் உறையும் காளத்திமலையைக் கண்டவுடன் - இறைவன் திருப்பெயரைக் கேட்டவுடன் அவர்மீது இனம் புரியாத அன்பு கொண்டார். பொன்முகலியாற்றைக் கடந்து, மலைச்சாரலை அடைந்தபோது அவரன்பு பன்மடங்கு வளர்ந்தது. அது ஆர்வமாகி பெருங்காதலாகி, மேன்மேல் பெருகிற்று. மலைப்பாதையில் வேட்கைக் கனல் அவரை ஈர்த்துக்கொண்டு சென்றது. இதனைச் சேக்கிழார், நாணன் என்பவன் மட்டும் வழிகாட்டிச் செல்லவில்லை. அன்பும் அவர் முன்பே சென்றது எனக் கூறுவதால் தெரிவிக்கின்றார். அவரது அந்த மலைவழிப் பயணம் மரங்களை மட்டும் கடந்து சென்ற ஒன்று அன்று. உலகப் பாசபந்தங்களையும், மனித உடம்பில் ஆன்மாவைக் கட்டுப்படுத்தும் தத்துவங்களையும் சாதாரண தெய்வ நம்பிக்கைகளையும் கடந்து சிவபரம் பொருளை நேரே காண்பதற்குச் சென்ற பயணம் என்கின்றார் சேக்கிழார்.

மலையுச்சியை அடைந்து, குடுமித் தேவரைக் கண்டவுடன் விரைந்தோடிச் சென்று, தழுவி, உச்சிமோந்து, பெருமூச்சுவிட்டு, கண்ணீர் சொரிந்து, இவரைத் தேடிப்பிடித்துவிட்டேன் என்று திண்ணனார் ஆறுதல்கொள்வதில் ஒரு தாயின் அன்பு மட்டுமன்று அத்தாய் தன் குழந்தையைப் பிரிந்து, பல பிறவிகளில் தேடி, இப்போது கண்டுபிடித்துவிட்டது போன்ற உளமார்ந்த உயிரார்ந்த நிறைவு புலப்படுகின்றது.

"நொடிதுபோது உயிர்த்துநின்று நிறைந்தெழு
மயிர்க்கால் தோறும்
வடிவெலாம் புளகம் பொங்க, மலர்க்கண்ணீர் அருவிபாய
அடியனேற்கு இவர்தாம் இங்கே அகப்பட்டார்
அச்சோ என்று
படியிலாப் பரிவு தானோர் படிவமாம் பரிசு தோன்ற"

என்று இந்த இணையிலாத் தாயன்பைச் சேக்கிழார் பாடுகிறார். வையகத்தில் வேறு எங்கும் காணமுடியாத அன்பு ஒரு வடிவம் கொண்டது போல அவ்வேடர்குலச் செம்மல் மாறிவிட்டார் என்பது நம்பற்கரிய அதிசயமன்றோ?

அவர் கற்றதில்லை; சாத்திரமறியார்; சிவனை வழிபடும் முறையறியார். அன்றிலிருந்து ஆறு நாள் அவர், தாமே வேட்டையாடி, விலங்குகளின் இறைச்சியை நெருப்பில் வதக்கி, சுவை பார்த்து பூவோடும் நீரோடும் மலையடிவாரத்திலிருந்து கொண்டுவந்து குடுமித் தேவரை வழிபட்ட முறை சாத்திரத்திற்கு ஒவ்வாது ஆனால், ஈடிணை அற்ற அன்பிற்கு எடுத்துக்காட்டு. ஒரு கையில் வில்லுடன் அம்பு இறைவனுக்கு உணவூட்டுவதைப் போலவே, அவனை அக்காட்டில் பாதுகாப்பதும் முக்கியம், மறு கையில் தேக்கிலையில் தேன் கலந்த ஊன், வாயில் திருமஞ்சன நீர், தலையில் மலர்கள் இவ்வாறு பெருமான் முன் சென்று, முன்னாள் சூட்டிய மலர்களைச் செருப்புக் காலால் அகற்றி, திருமஞ்சன நீரை உமிழ்ந்து தலையினாலே பூவைச் சொறிந்து, ஊனைப் படைத்து ஐயனே உண். நானே சுவை பார்த்துக்கொண்டு வந்தேன். இது நேற்றையதை விடச் சுவையாக உள்ளது. ஏன் தெரியுமா? தேனும் கலந்திருக்கிறேன் என உணவுண்ண அடம்பிடிக்கும் குழந்தையைத் தாய் அன்புரை கூறி உண்ணச் செய்வது போல் கொஞ்சிக் கொஞ்சிக் கூறுகின்றார்.

பார்ப்பவர்க்கு அங்கு இருந்த தெய்வம் சிவலிங்கமாகத் தோன்றும். ஆனால் திண்ணனார்க்கு அப்பெருமான் உயிருடனும், உணர்வுடனும் மடியில் தவழும் குழந்தை. பகலெல்லாம் வேட்டையாடி இறைவனுக்கு உணவளித்தார். இரவெல்லாம் உறங்காமல் வில்லும், கையுமாக நின்று பாதுகாத்தார். ஊரை மறந்தும் உறவை மறந்தார். பெற்றோரைத் துறந்தார் ஏன்? தம்மையே மறந்தார்.

ஆகமப்படி அங்குப் பூசை செய்து வந்த அந்தணர் நாள்தோறும் காலையில் திண்ணனார் வேட்டைக்குச் சென்ற பின்பு அங்கு வந்து, ஊன்தசைகளைக் கண்டு வருந்தி இந்த அனுசிதம் செய்தார் யாரோ? என்று திகைத்தார். அதை அனுசிதம் (ஒவ்வாதது) என்று கொள்ளாத இறைவன் ஐந்தாம் நாளிரவு கனவில் அவர்க்குத் தோன்றி

வன்திறல் வேடுவன் என்று மற்று அவனை
நீ நினையேல்
அவனுடைய வடிவெல்லாம் நம்பக்கல் அன்பு
அவனுடைய செயலெல்லாம் நமக்கு இனிய

முன்னாள் சாத்திய மலர்களை அகற்ற என் தலையில் அன்பின் அருள் பொழிந்தது போல் விழுந்த அவனது செருப்படி முருகன் இளங்குழந்தைப் பருவத்தினனாக என் தலையில் உதைத்ததைப் போல இருந்தது என, திண்ணனாரின் அன்பு கண்டு பொங்கிய பேரருளைப் புலப்படுத்தி, அந்த அன்பின் பான்மையை மறுநாள் மறைந்திருந்து காணுமாறு பணித்து மறைந்தார். காலையில் வேட்டையாடி, ஊனோடும் பூவோடும், புனலோடும் வந்த திண்ணனார், இறைவன் கண்களில் அடுத்தடுத்துப் பெருகிய குருதியைக் கண்டு மறுகிப் பதைத்து வீழ்ந்தமையும், மலையடிவாரத்தில் மூலிகை தேடி ஓடியமையும், உரிய மருந்திலைகளை இறைவன் கண்ணில் பிழிந்த விரைவும், திண்ணனாரின் அன்பு, அந்த அந்தணருக்கு ஒரு தாயை நினைவூட்டியிருக்கும்.

குருதி வழிதல் மருந்தினால் நில்லாமை கண்டு திகைத்து ஊனுக்கு ஊன் என்னும் வாசகத்தை நினைவுகூர்ந்து என் கண்ணைத் தோண்டி அப்புவேன் என்று யாரும் செய்யத் துணியாத அருஞ்செயலைச் செய்தமை அன்பின் கொடுமுடி. மறுகண்ணிலும் குருதி சொரிய, ஒரு சிறிதும் மனந்தளராமல், மருந்து கைகண்டேன் என்று தமது மற்றொரு கண்ணையும் தோண்ட முனைந்தமை எல்லை காண முடியாத அன்பு. அவ்வன்பு வெள்ளத்தை இறைவனாலேயே தாங்க முடியவில்லை. தரித்திலர் தேவதேவர் என்கின்றார் சேக்கிழார். துடித்துப் போய்விட்டதாம் இறைவனின் திருவுள்ளம். திண்ணனாரின் கைகள் தடுக்கப்பட்டன. கண்ணப்ப நிற்க, என்னும் வாக்கும் வானில் எழுந்தது.

அனைத்துயிர்க்கும் தந்தையாய் தனக்குத் தந்தையற்ற பரம்பொருள் கண்ணப்பரின் அன்புக்கு உருகி அப்பா என்று அழைத்தமை நினையுந்தோறும் உணர்வுப் பெருக்காய் நிற்கின்றது.

அவன் சேந்தனாவது எவ்வாறு?

தமிழாகரர் தெ.முருகசாமி
காரைக்குடி

"முற்படக் கிளத்தல் செய்யுளுள் உரித்தே" என்பது தொல்காப்பியச் சொல்லதிகார (39) நூற்பா, இது செய்யுளில் சுட்டுப்பெயர் முன்னரும் இயற்பெயர் பின்னரும் வரும் என்பது பற்றி விளக்குகிறது. இதற்கு எடுத்துக்காட்டாகக் கீழ்வரும் பாடலை இளம்பூரணர் சுட்ட அதனையே அடுத்தடுத்த உரையாசிரியர்களும் சுட்டிக்காட்டினர்.

அவனணங்கு நோய்செய்தான் ஆயிழாய்! வேலன்
விறன்மிகுதார்ச் சேந்தன்பேர் வாழ்த்தி முகனமர்ந்
தன்னை யலர்கடப்பந் தாரணியில் என்னைகொல்
பின்னை யதன்கண் விளைவு

இப்பாடல் தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்றலாக அமைந்த அகத்திணைப் பாடல். இதில் அவன் சுட்டுப்பெயர், சேந்தன் இயற்பெயர் என உரையாசிரியர்கள் கூறினர். தலைவி கூற்றான இதில் சுட்டி ஒருவர்பெயர் கொளப்பெறாஅர் என்ற அகமரபுப்படி (அகத்54) தலைவி சேந்தன் எனத் தலைவனது பெயரைச் சுட்டியது சரியா? உரையாசிரியர்கள் இதனை உணராமலா உரைத்தனர் என எண்ணும்போது எப்படி சேந்தன் இயற்பெயரானது? என நோக்குவதே இக்கட்டுரையின் கருது கோள்.

இப்பாடல் தலைவி கூற்றானாலும் வெறியோடும் வேலனது கூற்றையும் சேர்த்துக் கொண்டு கூறுவதாக அமைந்த பாட்டு இது. அதாவது தலைவனது தொடர்பால் தலைவிக்கு ஏற்பட்ட காமநோய்க்குரிய காரணத்தை அறியாத அவளது தாய் வேலனை அழைத்து வெறியாடச் செய்யும் முயற்சியின் போது தலைவி தோழியிடம் கூறுவதாக அமைந்த சூழலைக் கொண்டது இப்பாடல்.

வெறியாடுதற்கு ஏற்பாடு செய்த தாய் வேலனிடம் முருகனால் வந்த நோயை வெறியாடி நீக்குக எனக்கூற, வேலன் அத்தாய் கூறியதை உள்வாங்கிக் கொண்டு அவனாலா இந்நோய் வந்தது என மொழிந்து முருகனாகிய சேந்தன் பேர் சொல்லி வாழ்த்தி வெறியாட முற்பட்டான். ஈண்டு அவன் என்றதும் சேந்தன் என்றதும் வேலனால் மொழியப்பட்டவை.

வேலன் முருகனை அவன் எனக்கூறக் காரணம் யாதெனில் முருகனால் வந்தது எனத் தாய் கூறியதாய் கூறியதால் அக்கூற்றை எடுத்து மொழியும் வகையாக முருகனாலா வந்தது? எனக்கூறாமல் அவனாலா வந்தது? என மொழிந்தான். தாய்க்கும் வேலனுக்கும் நேரிடை உரையாடல் என்பதால் முருகனாலா எனக் கூறுதற்குமாறாக அவனாலா எனக் கூறுவது தாய் மொழிந்த முருகனையே சுட்டும் என்பதில் ஐயமில்லை.

ஒருவரோடு ஒருவர் உரையாடுகையில் உம்மைப் பற்றிக் கந்தன் இப்படிச் சொன்னான் எனக் கூறக்கேட்டவர் கந்தனா சொன்னான் என்றும் கூறலாம். மாறாக அவனா சொன்னான் என்றும் கூறலாம். இவ்வாறே முருகன் பேர் சொல்லி வெறியாடும் வேலன் தாயிடம் அவனணங்கு நோய் செய்தான் என்று வினாக்குறிப்போடு கூறிய பின் முருகனாகிய சேந்தன் பேர் சொல்லி வாழ்த்தி வணங்கி வெறியாடினான் என வெறியாடும் எல்லாச் சூழலையும் நினைந்து பொருள் காண வேண்டும். இதனால் அவன் என சுட்டியதற்கேற்பச்சேந்தன் என மொழிவதும் வேலனே என்பதால் வேலன் கூற்றுப்படி சுட்டுப் பெயரும் இயற்பெயரும் ஒருங்கு வந்த என்ற அளவில் இப்பாடல் முற்படக்கிளத்தல் என்ற நூற்பாவுக்கு எடுத்துக்காட்டாகிறது. இவ்வாறாக வேலன் மொழிந்ததைத் தலைவி எடுத்துமொழிவதால் பாடல் தலைவி கூற்றாயினும் அவன் சேந்தன் எனச்சுட்டியது தலைவி கூற்றாகாதென்பதால் அகத்திணை மரபுகெடாமல் அமைந்த பாடல் இது எனலாம்.

பாடலில் வேலன் கூறியது மட்டும் உள்ளது தாய் கூறிய செய்தி இல்லையானாலும் வெறியாடச் சொன்னதால் வேலன் வெறியாடினான் என உணரும் போது தாயின் கூற்று உணரப்பட்ட நிலை என்பது பாடலின் மறைபொருளான செய்தியாக உணரவேண்டும். இதனை

கார் அறுத்தான் எனக்கூறும் மும்மடி ஆகுபெயரான குறிப்பில் பொருள் உணரவேண்டும்.

கார் என்பது முதலில் மேகத்தைக் குறித்து, பின்னர் மேகம் பொழிந்த மழைக்காலத்தைக் குறித்து, பின்னர் அம்மழைக்காலத்தில் விளைந்த நெல்லைக் குறித்தது போலத் தாய் கூற, அவன் கூறியதைக் கேட்ட வேலன் எடுத்து மொழிய, இவை அனைத்தையும் உள்ளடக்கிய நிலையில் தலைவி கூறினாள் என்பது கருத்து. இதனால் ஒரு செய்யுளின் பொருள்நுட்பத்தை உணரவேண்டுமாயின் கூறும் கதைமாந்தரின் கூற்றுக்கேற்ப உணரவேண்டும் எனத்தெரிகிறது. இவ்வுண்மையால் தான் தொல்காப்பியர் செய்யுளியலில் செய்யுள் உறுப்புக்கள் என வரையறுக்கையில் கூற்றுவகை என்ற ஒன்றையும் சேர்த்துக் கூறிய சிறப்பு நீள நினைத்து பாராட்டுமாறு உள்ளது.

ஈண்டு இப்பாடலில் அவனணங்கு நோய் செய்தான் என்பதைத் தலைவி கூற்றாகக் கொண்டு தலைவி விரும்பும் தலைவனது பெயரும் வேலன் வெறியாடி வாழ்த்திக் கூறும் பெயரும் ஒன்றே யாதலின் (முருகனாகிய சேந்தன்) வேலனது கூற்றைத்தழுவிக் கூறும் நிலையில் ஒருவாற்றான் தலைவி தலைவனின் பெயரை மறைமுகமாகக் கூறியதாகக் கருதி அவன் என்பதற்கேற்ப சேந்தன் என்பது தலைவியால் சுட்டப்பட்ட இயற்பெயர் என்பதாகக் கூறுவோரும் உண்டு.

வேலன் மொழிந்த சேந்தன் என்ற பெயரைத் தலைவி தாங்கிக் கூறும் நிலையில் மறைமுகமாகத் தலைவனது பெயரைக் கூறியதாகக் கருதினாலும் சுட்டி ஒருவர்ப்பெயர் கொளப் பெறாஅர் என்பதற்கு மாறாகவே அமைந்துவிடும். மேலும் அவனணங்கு நோய் செய்தான் என்பதைத் தலைவி கூற, வேலன் சேந்தன் எனக்கூறினான் எனக்கருதினால் சுட்டுப்பெயரை ஒருவர் கூற அதற்கான இயற்பெயரை இன்னொருவர் கூறுவதான பிழைநேரிடும் என்பதால் இக்கருத்தும் ஏற்படையதன்றாம்.

எனவே தாய் கூறிய முருகனின் பெயரைக் கேட்ட வேலன் அதனை மொழிந்த அளவில் அவன் எனச்சுட்டி அதற்கேற்பப் பின்னர் சேந்தன் என இயற்பெயர் சுட்டினான் எனச்சுற்றி வளைத்துப் பொருள்

காணும் நிலையில் தான் முற்படக்கிளத்தல் என்ற நுற்பாவுக்கு எடுத்துக்காட்டாக இவ்வெண்பாப்பாடல் செய்யுளின் இயற்பெயருக்கு முன்னர் சுட்டுப்பெயர் அமைக்கலாம் என்பதற்குப் பொருத்தாமாயிற்று.

இப்பாடலின் பொருளைக் காண்போம். இழை அணிந்த தோழியே முருகனால் நமக்கு இந்நோய் வந்தது என தாய் எண்ணி அதனை நீக்க வெறியாடுமாறு வேலனிடம் வேண்டியதால் வேலன் அவனா நோய் செய்தான் என வியப்புடன் வினாவி அந்த வெற்றி பொருந்திய தார் மாலை சூடிய முருகனாகி சேந்தனது பெயரைச் சொல்லி வாழ்த்தி வெறியாடும் நிலையில் நம் நோய் நீங்கும் பொருட்டு அவ்வேலன் நாம் அணிந்து கொள்ள வேண்டித் தாயிடம் தரும் கடப்பமலரைத் தாய் நம்மிடம் தர அணிய நேர்ந்தால், அதனைப் பெற்று அணிவதா இல்லையா என்றஒருநிலைப்படாத தன்மை ஏற்பட்டால் நம் நிலை என்ன ஆவது?

இப்பொருள் நுட்பத்தில் தான் தாய் கூறஅதனைக் கேட்ட வேலன் அவன் எனச் சுட்டி பின்னர் அவன் என்பதற்கேற்ப முருகனாகிய சேந்தன் இயற்பெயராகிறான். இவ்வாறின்றி இப்பாடலை தோழியே! நாம் வருந்தும்படியாக நம் தலைவனாகிய அவன் நோய் செய்தான் என்பதை அறியாத நம் தாய் வேலன் வெறியாட்டிற்கு ஏற்பாடு செய்ய, அதனால் வேலன் வெறியாடும்போது முருகனாகிய சேந்தனைக் கூற அப்பெயர் நம் தலைவனது பெயரோடு ஒத்திருக்கக் கேட்டு மகிழ்ந்தாலும் வேலன் நாம் அணிய வேண்டித்தாய்மூலம் கொடுத்தனுப்பும் கடப்பமலரைத்தர ஏற்பதா என்ற நிலை உருவாகும்போது நம்நிலை என்ன? என்பதாகப் பொருள் கொண்டால் அவன் என ஒருவர் கூற அதற்கேற்ப கூறிய வேறு இயற்பெயர் கூறாத குறைநேர்வதால் இஃது உண்மைக் கருத்தன்று என்பதாம்.

எனவே தாய் முருகன் என எடுத்து மொழிந்ததற்கு வேலன் அம் முருகனை அவன் எனச்சுட்டி மொழிந்து பின்னர் இயற்பெயர் சுட்டினான் என வெறியாடும் சூழல்கள் அனைத்தையும் நினைவுகூறும் வகையில் வேலன் கூற்றில் அவன் சுட்டுப்பெயர் சேந்தன் சுட்டுக்கான இயற்பெயர் ஆனது என்பதே கருத்துப் பொருத்தம் ஆகும்.

பதிப்பாசிரியர்.

பேராசிரியர். இரா. சதாசிவம்

ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். இ.கி. இராமசாமி
திரு. சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்
திரு. ந. வாசுகிராசா